

# திராவிடநாடு




2 அணா




தம்பி,

போர்! போர்! போர்! — இப்போது உலகிலே ஒரு பயங்கரமான போர் மூண்டு, மனிதகுலமே அழிக்கப்பட்டுப் போய்விடுமோ என்று அறிவாளர்களெல்லாம் அச்சப்பட்டுக் கொண்டிருந்தார்களே, அத்தகைய போர் எழாது, என்று தைரியத்துடனும் மகிழ்ச்சியுடனும் கூறிக்கொள்ளக்கூடிய சூழ்நிலை மலர்ந்திருக்கிறது—துள்ளித் திரியும் குழந்தைகள், மொட்டுகள், பிஞ்சுகள், சமர்ச் சூருவளியால் பாழாகா என்ற தைரியம் பிறந்திருக்கிறது.

இது, உலக நிலையைப் பொறுத்துக் காணப்படும், களிப்பூட்டும் செய்தி.

ஆனல் இங்கே, நமது மாநிலத்தில், போர்! போர்! போர்! என்ற முழக்கம், பல்வேறு முனைகளிலிருந்து கிளம்பிவிட்டது.

ஜல்லடம் கட்டி, சங்கம் ஊதி, கட்கமேந்தி, களம் குதித்தோட, கட்டளையை எதிர்பார்த்துக் கொண்டு கணக்கற்றவர்கள் (போர் முடிவு பெற்ற பிறகுதானே கணக்குத் தெரியமுடியும்) உள்ளனர்.

போர்! போர்! எல்லையைக் காத்திடும் ஏற்புடையதோர் போராட்டம் வருகுது! தொல்லைகளைத் துடைத்திடுவோம், தொடை தட்டிக் கொண்டு வாரீர், துந்துபி கேளீர், துரிதமாக வாரீர் — என்றோர்புறமிருந்து முழக்கம் கேட்கிறது.

கோவா அட்டூழியத்தைக் காணீரோ! அந்த அக்ரமத்தை ஒழித்திட அனைவரும் ஒன்று சேரீரோ! — என்று மற்றோர்புறம் முழக்கம் கிளம்புகிறது!

ஆலயங்களிலே அர்ச்சனை நம் அருந்தமிழ் மொழியில்ன்றே இருத்தல் வேண்டும்,, ஆத்திக அன்பர்கள்! அஞ்சாது போரிட வாரீர், அரன்மீது பாரத்தைப் போட்டுவிட்டு வெஞ்சமரில் ஈடுபட வாரீர், என்று வேறோர் போர் முழக்கம் கேட்கிறது.

பாட்டாளிகளின் துயர் துடைக்கும் போரன்றோ போர்! மற்றவை பேரளவு போர் என்ற பெயர் பெறுதலும் ஆகுமோ! ஆண்மையாளர்களே! அணிவகுத்து நில்லுங்கள்! அழைப்பைச் செவியில் கொள்ளுங்கள்! போர்! போர்! புத்துலகம் காணப் பெரும்போர்! புனிதப்போர் ஒரே போர்! ஒப்பற்ற போர்!— என்று கம்யூனிஸ்டுக் குரல் கணகணவென ஒலிக்கிறது.

பெரியாரின் ஆகஸ்ட்டுப் போர் பற்றிய அறிவிப்பும் வந்துவிட்டது.

ஆகஸ்ட்டு முதல்நாளன்று தேசியக் கொடிகளைக் கொளுத்தி, அதன்மூலம் வடநாட்டுச் சர்க்காரை, திராவிடத்தின் மனநிலையை அறியும்படிச் செய்வது என்பது போர்த் திட்டம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

காமராஜர் ஆட்சியை ஆதரித்துக்கொண்டிருக்கும்போக்கிலேயே பெரியார் சென்றுகொண்டிருப்பார், திராவிட நாட்டுக்கான பிரச்சினைகளை 'காலாவதி ஆகும்படிச் செய்துவிடுவார் என்று எண்ணிக்கொண்டிருந்தவர்கள் எல்லாம் திடுக்கிட்டுப் போயிருப்பர், இந்தப் போர்த் திட்டம் கேட்டு. இந்த தினை மூன காணுக்களுக்கு அரசியல் நாகரிகமே தெரியவில்லை— பெரியார், கம்யூனிஸ்டுகளை ஒழித்தாகவேண்டும்என்ற புனிதமான (!) கோட்பாட்டுக்காக, இடைத் தேர்தல்களில் காங்சிரசை ஆதரித்து வருகிறார்—இது அல்லவா யூகம், அரசியல் கண்ணியம்—ஜனநாயகம்—என்றெல்லாம் பேரிகை கொட்டினர், காங்கிரசின் சின்ன சாமிகள். அவர்கள் கண்டார்களா, பெரியாரின் மனதிலே உருவாகிக்கொண்டுள்ள போர்த் திட்டம்பற்றி. இப்போது ஆகஸ்ட்டு போர்பற்றி அவர் அறிவித்ததும், அந்த வட்டாரம், திகைத்துப்போய்க் கிடக்கிறது.

தம்பி, நமது வட்டாரத்திலே என்ன கருத்து நிலவுகிறது என்பதைக் கேட்க ஆவலாக இருப்பாய்; கேள்:

*

(1) ஆகஸ்ட் கிளர்ச்சியில் ஈடுபடும்படி எல்லாக் கட்சிகளையும் அழைக்கிறேன் என்று பெரியார் கூறுவதன் பொருள் என்ன?

ஓஹோ! எல்லாக் கட்சிகளும் என்றதும், உனக்குச் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது; சகஜந்தான்! எல்லாக் கட்சிகளும் என்றால், நாட்டிலே உள்ள கட்சிகள் எல்லாம் என்று பொருள் கொள்ளலாமா! பொருத்தமாக இராது! காங்கிரஸ், கம்யூனிஸ்டு, பிரஜா, இந்துமகாசபை, தமிழரசு ஆகிய கட்சிகள் யாவும், இந்தி விஷயமாகக் கொண்டுள்ள எண்ணம், இந்தி கூடாது என்பதல்ல; கட்டாயப்படுத்த வேண்டாம்; அவசரப்படுத்தவேண்டாம் என்பதுதான். பெரியார், இந்தி கூடாது, ஏனெனில் இந்தியாவின் ஆட்சிக்குள் திராவிடம் இருத்தல் கூடாது என்று கொள்கை வகுத்துக்கொண்டவர். எனவே இந்தியை எதிர்த்து பெரியார் நடத்தும் கிளர்ச்சியில் அந்தக் கட்சிகள் எதுவும் ஈடுபடாது; அக்கரை காட்டாது.

(13-ம் பக்கம் பார்க்க)

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

மலர் 14 ] 24—7—55 [ இதழ் 3

# குதூகல விழா! —சோகக் காதை!!

திலகமில்லை! கரங்களில் வளை காணேம்! கழுத்திலே மங்கலக் கயிறு இல்லை!!

இவ்வளவு தெரிந்தால் போது மல்லவா—ஒரு சோகச் சரிதத்தை மனக்கண்ணால் காண!

மரக்கிளையில் தொங்கும் பிணம், தூர்ந்து கிடக்கும் அகழி, இடிந்து காணப்படும் மாளிகை, கலனுன கட்டிடம்—இவை ஒவ்வொன்றும் ஒரு சோகக் காதையை எடுத்துக் கூறுமல்லவா. அதுபோல ஒரு சிறு நிகழ்ச்சி, நாட்டின் நிலைமையைத் தெளிவாக எடுத்துக் காட்டுவதாக அமைந்திருக்கிறது. ஆனால், நிகழ்ச்சி கண்களைக் குளமாக்கக் கூடியதல்ல. மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சி. மலர்ந்த முகங்கள்! மாலை மரியாதை!! வரவேற்பு வைபவம்! இவைகள் தெரிந்த நிகழ்ச்சி இது! எனினும் குங்குமமிழந்த குமரி, குலைந்துபோன கோட்டை கொத்தளம், வறுமைக்குப் பலியானவன் போன்றவைகள் மூலம், சோகக் காதை தெரிவது போலவே நாம் குறிப்பிடும் இந்தக் குதூகல விழாவின் மூலமும், ஒரு சோகக் காதைதான் கிடைக்கிறது.

சென்ற கிழமை, நமது மாநில முதலமைச்சர் காமராஜர், மதுரையம்பதியில் ஒரு மோடார் விற்பனைக் கூடத்தைத் திறந்துவைக்கும் வைபவத்தில் கலந்து கொண்டார். பாண்டியன் கம்பெனி என்பது இந்த அமைப்புக்குப் பெயர். இதன் நிர்வாகப் பொறுப்பாளர், ஆர். வி. சாமிநாதன் என்பவர், சட்டசபை உறுப்பினர்.

முதலமைச்சரை சட்டசபை உறுப்பினர் புகழ்ந்துரைத்து வரவேற்ருர், சட்டசபை உறுப்பினரின் அறிவாற்றலை முதலமைச்சர் பாராட்டினர்; விழா காணவந்திருந்த பிரமுகர்கள், புன்னகையைப் பொழிந்தனர்; இடையிடையே பெருமூச்சும் கிளம்பி இருக்கும்.

இந்த நிகழ்ச்சி மூலம் காதை என்ன தெரிகிறது என்று கேட்பர். மாநில முதலமைச்சர்கள் இது போலத் திறப்புவிழாக்கள் நடாத்திக்கொண்டுதானே இருக்கிருர்கள், இதிலே என்னகாதை இருக்க முடியும் என்பர். இருக்கிறது. தேசியத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் எனும் சோகக் காதையைக் காட்டுகிற நிகழ்ச்சி இது.

பாண்டியன் விற்பனை நிலையம் என்பது, பாண்டி மண்டலத்திலே மோடார்களை விற்பனை செய்வதற்காக ஏற்பட்டிருக்கிறது.

டாடா கம்பெனியும் மெர்சிடீஸ் கம்பெனியும் கூட்டாகச் சேர்ந்து தயாரிக்கும் மோட்டார்களை விற்பனை செய்ய பாண்டியன் கம்பெனி! தரகர்கள்!!

டாடா, வடநாட்டு முதலாளி—மெர்சிடிஸ் என்பது ஜெர்மன் முதலாளி அமைப்பு.

இந்திய முதலாளியும் ஜெர்மன் முதலாளியும் கூட்டு! இதற்கு தென்னுட்டுக் காங்கிரஸ்காரர், சட்டசபை உறுப்பினர் தரகர்.

சுயராஜ்யம் எவ்வகையான உருவெடுத்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டும் அமைப்பு இது.

வடநாட்டு முதலாளிகளும் வெளி நாட்டு முதலாளிகளும் கூட்டாகச் சேர்ந்து இலாப வேட்டையாடுகிருர்கள் — இந்த வேட்டைக்குத் தாரை தப்பட்டை தட்ட, தென்னுட்டிலே தேசியத் தலைவர்கள் கிளம்பிவிட்டார்கள்.

சுயராஜ்யத்துக்கு முன்பு வெளிநாட்டு முதலாளிக்கு இந்த நாட்டு முதலாளிகள் தரகர்களாக இருந்தனர்.

சுயராஜ்யத்துக்குப் பிறகு வெளிநாட்டு முதலாளியும் இந்த நாட்டு முதலாளியும் கூட்டாளிகள்! தேசியத் தலைவர்கள், தரகர்கள்!

மக்கள் ஏதோ, வெள்ளைக்காரன் எனும் கொள்ளைக்காரன் விரட்டப்பட்டுவிட்டான், தேசியக் கொடி பறக்கிறது, சுயராஜ்யம் நடைபெறுகிறது, எனவே பழைய கொடுமைகள் அழிக்கப்படும், முதலாளித்துவப் பிடியிலிருந்து ஏழைகள் மீட்கப்படுவர் என்று எதிர்பார்த்தனர்—எனவேதான் சுயராஜ்யம் பெற கஷ்ட நஷ்டமேற்றனர். ஆனால் நடைபெற்றிருப்பதோ, முற்றிலும் வேறு! முன்பு வெள்ளை முதலாளிக்கும் இந்திய முதலாளிக்கும் போட்டி பொருமையும், பூசலும்! இப்போது இருவருக்குள் கூட்டு, நேசம், உறவு! தேசியத் த[illegible]லவர்களோ இதற்குத் தரகு வேலை பார்ப்பதைப் பெறற்கரிய பேருக எண்ணிக்கொண்டுள்ளனர். ஏழை மக்களோ, முதலாளிகளின் கொடுக்குகளுக்கிடையில் சிக்கி வதைபடுகிருர்கள்.

பாண்டியன் கம்பெனி! டாடா—மெர்சிடிஸ் கூட்டு; அதற்குத் தரகு பார்க்க இது! இதை நடத்திவைக்கும் தொண்டிலே ஈடுபட, ஒரு M. L. A.—காங்கிரஸ் தலைவர்! இந்த விழாவுக்கு முதலமைச்சர்!

உள் நாட்டு முதலாளியும் வெளி நாட்டு முதலாளியும் ஒன்றுகூடி, தேசியத் தலைவர்களைத் தரகர்களாக்கிக்கொண்டு தர்பார் நடத்துகிருர்கள்-பாண்டியன் மோட்டார் கம்பெனி துவக்க விழா காட்டும் சோகக்காதை இதுதான்!—தேசியத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் இந்த நிகழ்ச்சி மூலம் தெளிவாகத் தெரியத்தான் செய்கிறது—கருத்துடன் இதனைக் கவனிப்போருக்கு! ஆனால் எத்தனைபேர், கருத்துடன் கவனிக்க முடியும்!

“அரசியல் தலைவர்களுக்கு அரசியல் தவிரவேறு எதுவும் தெரியாது என்ற ஏச்சும் பேச்சும், பொய்படும்படி, என் நண்பர் சுவாமிநாதன் அவர்கள, இந்த வணிகத் துறையிலே ஈடுபடுகிருர்கள். இதிலேயும் அவர் திறமையுடன் பணியாற்றுவார்கள் என்பது எனக்குத் தெரியும்” — என்ற கருத்துப்பட முதலமைச்சர் பேசினுர்—அந்தப் பேச்சு என்ன காரணத்தாலோ, சட்டசபை உறுப்பினரைச் சுருக்கெனத் தைத்திருக்கிறது. அவர் சொன்னுர், “நான் அரசியலை விட்டுவிடவில்லை; அதையும் கவனித்துக்கொள்வேன், வியாபார வேலையையும் பார்த்துக்கொள்வேன்” என்று; முதலமைச்சர் விடவில்லை, “அது தவறு! ஏதாவது ஒரு துறையிலே ஈடுபட்டால், அதிலேதான் முழுக் கவனத்தையும் திறமையையும் செலுத்த வேண்டும்; அப்போதுதான் வெற்றி கிடைக்கும்” என்று கூறிவிட்டார்!

இரு உள்ளங்களும் நமக்குப் புலனாகிறது.

இலாபம் சம்பாதிக்க, வியாபாரத் துறையிலே இறங்குபவர், இனி அத்துடன் நிற்கவேண்டும், அரசியலில் தலையிடக்கூடாது என்பது 'பிரம்மச்சாரி'யின் கருத்து, குடும்பம் நடாத்துவதில் ஈடுபட்டுள்ள சட்டசபை உறுப்பினருக்கோ, அதற்கு இது துணையாக இருக்கட்டும், இதற்கு அது துணையாக அமையட்டும்—அரசியல் உழவு, வியாபாரம் அறுவடையாக அமையட்டுமே—அறுவடை முடிந்தால், மறுபடியும் உழவு நடைபெற வேண்டும், மீண்டும் அறுவடை, இப்படி, இரு துறைகளிலும் ஆற்றலைக் காட்டுவோம் என்பது திட்டமாக இருக்கக் கூடும்!

இந்த நிலை, தனிப்பட்ட ஒரு சட்டசபை உறுப்பினரின் குணத்தைப் பொறுத்ததல்ல! பொதுவாகவே காங்கிரஸ் வட்டாரத்தில், இதுபோது இந்த நிலை இருக்கிறது.

அரசியலையும் வாணிபத்தையும் தொடர்பு படுத்தி—பலன் காண விழைகிறார்கள் பலர்.

வாணிபத் துறையிலே ஈடுபடுவது பற்றி மகிழ்ச்சிதான், அதிலே நல்ல இலாபம் கிடைக்க வேண்டும் என்று ஆசியும் கூறுகிறோம், இலாபம் அடைவதற்காக உதவிகள் செய்துதரவும் இசைகிறோம், ஆனால் ஒரு துறையிலே வேலை செய்து பணப் பெட்டியை நிரப்பிக் கொண்டு, அதேபோது அரசியல் துறையிலே ஈடுபட்டு, 'ஓட்டுப் பெட்டி'யையும் நிரப்பிக்கொள்ள வேலை செய்வது, எமக்குப் பிடிக்கவில்லை, என்று கருதுகின்றனர் வேறு சிலர். நமது முதலமைச்சர் இந்தக் கருத்தினர் என்று நிகழ்ச்சியின்போது அவர் வெளியிட்டுள்ள கருத்திலிருந்து யூகிக்க முடிகிறது.

பல ஆண்டுகள் பாடுபட்டோம், இப்போது சில ஆண்டுக் காலம் பலன் அனுபவிக்கலாமே!—என்று எண்ணும் காங்கிரஸ் தலைவர்கள் முதலாளிகளின் தரகர்களாகிறார்கள்! தரகர்களாவதுடன் திருப்தி அடையாமல், அவர்கள் அரசியலிலும் இருக்க விரும்புகிறார்கள்! ஒன்றுக்கு ஒன்று துணை!

ஆனால் அரசியலிலேயே காலமெல்லாம் இருப்பது என்றுள்ள காமராஜர்கள், இவ்விதமான 'பணம் தேடுபவர்களை' வெறுத்து விடவில்லை—பணம் தேடுங்கள், கேட்கும்போது கட்சிக்குக்கொடுங்கள்—தேர்தலின்போது தாராளமாகக் கொடுங்கள், அந்தத் தொண்டு போதும், மீண்டும் அரசியலிலும் ஈடுபடுவோம் என்று வந்துவிடாதீர்கள்!—என்று கூறுகிறார்கள்.

தேசியத் தொண்டு செய்து தலைவராகி—தலைவரானதால் முதலாளிகளின் கண்களில் பட்டு, பிறகு அவர்களின் ஏஜண்டுகளாகி, பணப் பெட்டியை அதனாலே பலப்படுத்திக்கொண்டு, பணப்பெட்டி வலுவும் பொலிவும் பெறுவதால், ஓட்டுப் பெட்டியை நிரப்பி வெற்றி காணும் வழியையும் பெற்று, அந்த வெற்றி மூலம், பெரிய தேசியத் தலைவராக—ஏன் முடிந்தால் அமைச்சராக — திகழவேண்டும் என்று கருதுகிறார்கள் ஒரு சாரார்!

இது ஆபத்தாக முடியும்—சிந்தனை செய்து சூட்சமத்தைக் கண்டறியும் மக்கள் இதனை அருவருப்பார்கள் — பணம் பெருத்ததும், இவர்கள், திட்டிய மரத்திலேயே கூர்பார்க்கத் தொடங்கிவிடவும் கூடும், எனவே இவர்கள், பணம் தேடும் பயணத்தைத் தொடங்கினால் அதிலேயே முழுமூச்சாக ஈடுபட வேண்டும், அரசியலை விட்டு விடவேண்டும், அதை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம், எங்களை இவர்கள் சமயமறிந்து கவனித்துக் கொண்டால் போதும், எங்கள் ஓட்டுப் பெட்டி நிரம்பும் என்று மற்றோர் சாரார் கருதுகிறார்கள்.

தேசியத்தின் வளர்ச்சியும்வீழ்ச்சியும் என்பதன்றி இதனை வேறு எத்தகைய பெயரிட்டழைப்பது!

பணம் தேடத்தான் வியாபாரத் துறையிலே நுழைகிறீர்களே, அது போதும் என்றல்லவா இருந்துவிட வேண்டும் என்று கேட்கின்றனர் காமராஜர் போன்றோர்.

பாலும் பழமும், தேனும் தினைமாவும், வண்ண நிலவும் கிண்ணத்தில் மதுவும், குழலும் குழலியும்—இப்படி இருந்தால் இன்பமே அலாதியாக இருக்குமே—அரசியல் வியாபாரம், இரண்டும் இருக்கட்டுமே என்கின்றனர் சாமிநாதர்கள்!

சாமிநாதர்கள், காமராஜர்கள் கூறும் அறிவுரைகேட்டு உணர்ந்து அரசியலுக்கு முழுக்குப்போட்டு விட எண்ணினாலும், டாடா விடமாட்டார்!! அவருக்கு, வியாபார ஏஜண்டுகள் வேண்டும், அந்த ஏஜண்டுகள் காங்கிரஸ்காரராகவும் இருக்கவேண்டும், அந்தக் காங்கிரஸ்காரர்கள் குறைந்த பட்சம் சட்டசபை உறுப்பினராகவாவது வீற்றிருக்கத் தக்க அரசியல் செல்வாக்கும் பெற்றிருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஏஜண்டுகளின் பட்டியலைக் காட்ட முடிந்தால்தான், மெர்சிடீஸ் போன்ற வெளிநாட்டு முதலாளிகள் டாட்டாக்களுடன் கூட்டுச் சேருவார்கள்! அருமையான சங்கிலி!! எனவேதான், தேசியத் தலைவர்கள், அரசியல், வியாபாரம் எனும் இரு துறைகளிலும் இருந்து தீர வேண்டியவர்களாகிறார்கள்.

தேசியம் இத்தகைய வீழ்ச்சி அடைந்திருக்கிறது. விழா நிகழ்ச்சியைக் கூர்ந்து காண்போர், அதிலே வழங்கப்பட்ட கருத்துக்களை அலசிப் பார்ப்போர், இந்த உண்மையை உணருவர்.

சோகக் காதைதான்—தியாகத் தழும்புகளின் மூலம் எழுச்சிபெற்ற தேசியம், இன்று, உள்நாட்டு வெளிநாட்டு முதலாளிகளின் கூட்டுக் கொள்ளைக்கு நாட்டிலே இடம் ஏற்படுத்தித் தருவதுடன், தரகர்களையும் தந்துதவும், போக்கிலே சென்று, வீழ்ச்சி அடைகிறது!

குதூகல விழா — இதிலே புதைந்து கிடக்கிறது, இந்தச் சோகக் காதை!!

★

முகப்பில்.......

அகில உலக விவகாரங்களைப் பரிசீலனைசெய்துமுடிவு காண்பதற்காக அமைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் ஐ. நா. சபை, உலகத்தின் பெரும்பகுதியாக உள்ள சீனாவைப் புறக்கணித்திருக்கிறது என்பதை முகப்பில் உள்ள படம் காட்டுகிறது.

# மக்கள் கரமும் மன்னன் சிரமும்



கிராம்வெல்.



சார்லஸ்.

அளவுக்கு மீறிய அட்டகாசம் நடைபெறுகிறது, இதனால் ஆபத்து விளையும் என்று பயந்த பிரபுக்கள் சிலர் மன்னனுக்கு இதமாக அறிவுரை கூறிப்பார்த்தனர், தோற்றனர். மாமன்றத்தைக் கூட்டாதது, மக்கள் மனதிலே பெருங் கோபத்தை மூட்டிவிட்டது என்பதை எடுத்துரைத்தனர், ஏளனம் செய்யப்பட்டனர். சிலர், உரிமை அழிந்துபடுவதற்கு நாமும் உடந்தையாக இருந்தோம் என்ற பெருங்குற்றம் தம்மீது சாராதிருக்கவேண்டுமென்று கருதினர், மக்கள் சார்பிலே நிற்கத் தலைப்பட்டனர். ஆனால் எவரும் மிரட்சி அடையக்கூடிய விதமாக அடக்குமுறை இருந்தது.

வில்லியம்ஸ், என்றோர் மத அலுவலர், இவருக்கு, லாட் நடந்துகொள்ளும் முறை பிடிக்கவில்லை, வேற்றுமையை வெளியிட்டார்!

பொறி தெரியும்போதே அழித்துவிடுவதல்லவா, லாட் கையாண்ட முறை; அப்படிச் செய்தால்தானே, பெரு நெருப்பு மூளாது என்று கருதினார். எனவே, வில்லியம்ஸ் நட்சத்திர மண்டலம் கொண்டுவரப்பட்டார், வழக்கு நடந்தது, தயாரிக்கப்பட்ட தீர்ப்பு படிக்கப்பட்டது, பத்தாயிரம் பவுன் அபராதம் விதிக்கப்பட்டது; சிறையும் கூடச்சேர்த்து!

வில்லியம்ஸ், சிறையில் இருக்கும்போது, அபராதத்தை வசூலிப்பதற்காக அவர் இல்லத்தில் அரசாங்க அலுவலர்கள் புகுந்து, சாமான்களை எடுத்தனர், அப்போது வில்லியம்சுக்கு வந்த கடிதங்கள் சில கைப்பற்றப்பட்டன.

ஒரு ஏழை ஆசிரியர், வில்லியம்சுக்கு, எப்போதோ எழுதிய கடிதங்கள் அவை. "இந்த அற்பன்" "இந்தப் பஞ்சை"—என்று அக்கடிதத்தில் யாரைப்பற்றியோ குறை கூறி அந்த ஆசிரியர் எழுதியிருந்தார். இது, லாட் பற்றித்தான் எழுதப்பட்டது; எனவே சட்ட விரோதமான கடிதம்—எழுதினவர், கடிதம் பெற்றவர் இருவருக்கும் கடுந் தண்டனை விதிக்கவேண்டும் என்று உத்தரவு பிறந்தது, அதற்காக ஒரு எட்டாயிரம் பவுன் அபராதம் வில்லியம்சுக்கு. ஆசிரியரை அவர் பள்ளிக்கு எதிரிலேயே நிறுத்தி, தொழுவத்தில் மாட்ட உத்தரவாயிற்று. கொடுங்கோல் மன்னன் போலக் கடும்புலியும் கேடு செய்யாது என்று எண்ணிய ஏழை ஆசிரியர், நாட்டைவிட்டே ஓடிவிட்டார்.

அனைவரும் அந்த ஏழை ஆசிரியர்போல இல்லை; சித்தம் குழம்பவில்லை.

**சி.என்.அண்ணாதுரை.**

வில்பர்ன் என்றோர் எழுத்தாளன் 'ராஜத்துரோக'மாக எழுதினான் என்று வழக்குத் தொடுக்கப்பட்டது, முச்சந்தியில் நிறுத்தப்பட்டு, அவன் கழுத்தை ஒரு பலகைக்குள்ளே புகுத்தித் தண்டித்தனர்! இது கேவலப்படுத்துவதற்காக இருந்து வந்த தண்டனை முறை. சிறுகூட்டம் அவன் எதிரேகூடிற்று! அந்த நெஞ்சழுத்தக்காரன் அங்கு நின்றபடியே, அரசாட்சியிலே உள்ள கேடுகளையும் ஊழல்களையும் விளக்கலானான்! வெட்கப்பட்ட அதிகாரிகள், அவனைச் சிறைக்குள் போட்டு மூடினர், அரசாங்கத்தின் மானம் பறிபோகும் என்ற அச்சத்தால். சிறையிலே வில்பர்ன், பட்டினிகிடந்து சாகட்டும் என்று விட்டுவிட்டனர்; உடனிருந்த கைதிகள், தங்களுக்குத் தரப்பட்ட உணவில் சிறிதுசிறிது கொடுத்து, உயிர் பிழைக்க வைத்தனர். இவ்வளவு கொடுமைக்கு ஆளான, வில்பர்ன், இருபதாண்டு நிரம்பிய வாலிபன்! மக்கள் எவ்வளவு உருகியிருப்பர், அவன்பட்ட கொடுமை கண்டு! அந்தக் கண்ணீர், வலுவளிக்கும் மாமருந்து, என்பதை மமதையாளர் உணரவில்லை.

பிரையின் என்றோர் வழக்கறிஞர். சன்மார்க்கத்தைக் கட்டிக்காப்பாற்ற வேண்டும் என்பது அவர் நோக்கம். சன்மார்க்கத்தை ஆடல் பாடலாகிய களியாட்டங்கள் குலைத்து விடுகின்றன, ஒழுக்கத்தைக் கெடுக்கின்றன என்று எண்ணினார். ஆடல்பாடல் மிகுந்த நாடகங்கள், பிரான்ஸ் நாட்டிலிருந்து பிரிட்டனுக்குப் பரவின. அரசனும் அரசியும் அவைகளை ஆதரித்தனர். பிரையின், இக்காரணம் பற்றியும் வெறுப்புற்றார். எனவே இவைகளைக் கண்டித்து நூலொன்று வெளியிட்டார். அவருடைய இந்த நூலினால், என்ன கெடுதல் ஏற்பட்டுவிடும்! ஒழுக்கத்தை வளர்க்கும் நாடகங்கள் தேவை, வீண் காமக் களியாட்டங்கள் கேடானவை என்ற எண்ணம் வளரும், மனிதனைக் கெடுப்பது, ஆடல் பாடல் அல்ல; கெட்டவன் ஆடல் பாடலைத் தன் கெடுமதிக்குத் தக்கவண்ணம் பயன்படுத்திக்கொள்கிறான், மற்றவர், மனமகிழ்ச்சிக்குப் பயன்படுத்திக்கொள்வர், என்று அவருக்கு விடை அளித்திருக்கலாம். ஆனால், அடக்குமுறை ஆட்சியல்லவா!

பிரையின், வழக்கு மன்றத்தில் நிறுத்தப்பட்டார். 5000-பவுன் அபராதம்; வழக்கறிஞர் வேலைக்கு ஏற்றவரல்லர் என்று தண்டனை; காதுகளை வெட்டிவிடும்படி உத்தரவு; இறுதியாக, ஆயுள் தண்டனை!

அக்ரமம் இதைவிட வேறெப்படி இருக்கமுடியும்? தன் கருத்தை வெளியிட்டார், கலைத்துறை பற்றிய கருத்து! அரண்மனைக்குள் புகுந்து அக்ரமம் புரியும் மன்னனை வெட்டச் சொல்லி அல்ல, கொள்ளை அடிக்கும் அதிகாரிகளைக் குத்தச்சொல்லிஅல்ல, சதிபுரியச் சொல்லியுமல்ல, சமர் மூட்டியுமல்ல, சன்மார்க்கம் தழைக்க அவர் கருதிய வழி இது எனக்கூறினார். இது கொலையைக் கொள்ளையை, பலாத்காரத்தை, பயங்கரத்தை, ராஜத் துரோ

கத்தை, மதத்துரோகத்தை மூட்டக் கூடியதல்ல, சிந்தனையைக் கிளறி, சீரழிவைத் தடுக்கக் கூடிய ஏடு, இதற்காக, ஆயுள் தண்டனை! காதுகளை வெட்டிவிடுவது!

இந்தக் கடுந் தண்டனை தருவதற்காக, எப்போதோ ஒரு நாளில், மூன்றாம் எட்வர்டு எனும் மன்னன் காலத்தில் இயற்றப்பட்டு, உபயோகப்படுத்தப்படாததால் துருப்பிடித்துப் போய்க்கிடந்த ஒரு சட்டத்தை எடுத்து வீசினர்.

பேசினர் எலியட்—சிறையில் மாண்டார்! அவராவது ஆட்சியை எதிர்த்தார். இவர் ஆட்சியைக்கூட எதிர்க்கவில்லை, ஆனால் ஆயுள் தண்டனை. எவ்வளவு பேருடைய உடலும் உள்ளமும் பதறிப்போயிருக்கும், இந்தக் கடுந் தண்டனை பற்றிக் கேள்விப்பட்டபோது. இப்படியும் ஒரு ஆட்சியா! என்ற எண்ணம் எவர் உள்ளத்தில்தான் எழாமலிருக்கமுடியும்!

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அந்த அஞ்சா நெஞ்சினன், உறுதியைத் தளரவிடவில்லை. இந்த அக்ரம ஆட்சியில் இது எதிர்பார்க்கப்படவேண்டியதே என்று எண்ணினர். சிறையினின்றும் கூட, லாட்போன்ற மார்க்கத் துறையினர் நடாத்தும் அக்ரமத்தைக் கண்டித்து எழுதி வந்தார்!

மனமார நம்பும் கொள்கையின்படி, வாழ இது இனி இடமல்ல, என்று கருதியபலர், பிரிட்டனைவிட்டே சென்றுவிட்டனர்; சிறப்பாக, தூய்மையாளர் என்றமதப்பிரிவினர், கடல் கடந்து, தூர நாடுகள் சென்று வாழலாயினர். சிலர் மட்டும், அடக்கு முறையின் கூர்மழுங்குமளவு, மார்காட்டி நின்றுகவேண்டும் என்ற துணிவுடன் பணியாற்றினர்.

பர்ட்டன் என்பவரும், ஜான்பாஸ்ட் விக் என்பவரும், அடக்கு முறைக்கு ஆளாயினர், அஞ்சவில்லை. ஐயாயிரம் பவுன் அபராதம், காதுகள் பிய்த்தெறியப்பட்டன, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது, இருவருக்கும்.

சிறைக்குள் இருந்தவண்ணமும் எழுதிக்கொண்டிருந்த பிரையினுக்கு, மேலும் ஓர் தண்டனை தரப்பட்டது; ராஜத் துரோகி, நிந்தனை கூறுவோன், என்ற பொருள்பட எஸ். எல். என்ற எழுத்துகள் அவருடைய கன்னத்தில், சூடிட்டுப் பொறித்தனர்! நெடுந்தூரச் சிறைக்குத் துரத்தினர் மூவரையும்! மக்களோ அம் மூவருக்கும் தமது நெஞ்சில் இடமளித்துப் போற்றினர். சவுக்கடி தந்தனர் மூவருக்கும்; மக்கள், தங்கள் இதயத்தை மன்னன் சவுக்கால் அடிக்கிருன், எழுத்தாளர்களை அல்ல, என்று எண்ணினர், கதறினர், பதறினர்; இந்தக் கொடுமையைக் களையும் காலம் எப்போது பிறக்கும் என்று கேட்டனர்.

கண்டவர்கள் கண்டபடி புத்தகங்களை அச்சிட்டு வழங்குவதால், அரச ஆதிக்கத்துக்கு ஆபத்து விளைகிறது என்று கூறி, அச்சகங்களை அரசாங்கம் கண்காணிக்கலாயிற்று. மன்னராட்சிக்கு எதிராக ஏதும் செய்யாதவர்கள் என்று உறுதி கிடைத்த பிறகு, இலண்டனில் இருபது அச்சகக்காரார், இயங்க அனுமதிக்கப்பட்டனர். அவர்களன்றி வேறு யாராவது அச்சிட்டாலும், வேறு நாடுகளிலே அச்சடித்துக்கொண்டு வந்தாலும், கடுந் தண்டனை என்று உத்தரவு வெளியிடப்பட்டது.

மக்களிடம் உரிமைக் குரல் எந்த விதத்திலும் உலவக் கூடாது, என்று திட்டமிட்டு வேலை செய்தனர்.

கத்தோலிக்க மார்க்கத்தைச் சார்ந்த எனிரிட்டாவை, சார்லஸ் திருமணம் செய்துகொண்டதே, மக்களை ஏற்கனவே மிரட்சி அடையச் செய்தது. அந்த மிரட்சி மேலும் அதிகமாகும் சம்பவம் வேறு நடைபெற்றது.

பக்கிங்காம் இறந்த பிறகு, எனிரிட்டா கணவனுடன் குதூகல வாழ்க்கை நடத்திவர முடிந்தது. சார்லஸ், வேறு சில மன்னர்கள் போல, கட்டழகிகளைத் தேடித் திரியும் காமாந்தகாரனல்ல, துணைவியிடம் நிரம்ப அன்பு கொண்டவன், எனவே, எனிரிட்டாவின் செல்வாக்கு வளர்ந்தது. எனிரிட்டா, பதினைந்தாண்டுப் பாவையாகப் பிரிட்டன் வந்தபோது, பிரச்னைகள் புரியவில்லை, இப்போது, கூர்மையான அறிவும் அரசியலில் செல்வாக்குச் செலுத்தவேண்டும் என்ற ஆர்வமும் கொள்ளமுடிந்தது. மக்கள்; எனிரிட்டாவின் செல்வாக்கின் காரணமாக, கத்தோலிக்க மார்க்கத்தை எங்கே மீண்டும் புகுத்திவிடுகிருளே என்று கிலி கொண்டனர். மன்னனுடைய போக்கைக் கண்டுவந்தவர்களுக்கு, இதுவும் நடைபெறக்கூடும் என்றே தோன்றிற்று. அந்தத் திகில் அதிகமாவதற்குத் துணை செய்வதுபோலவே, பல நிகழ்ச்சிகள் இருந்து வந்தன.

போப்பாண்டவரால், எனிரிட்டா மூலம், பிரிட்டிஷ் கத்தோலிக்கர்களுக்குச் சில சலுகைகள் பெற்றுத் தர முடிந்தது. எனிரிட்டாவின் ஆதரவில் நடந்துவந்த தொழுகைத் தலத்தில், கத்தோலிக்கர் கூடித் தமது மார்க்க முறைப்படி தொழுகை நடத்தலாயினர். செல்வமும் செல்வாக்கும் படைத்த கத்தோலிக்கக் கனவான்கள், அரசியின் துணைகொண்டு, இழந்த இடத்தைப் பெற்று, போப்பாண்டவரின் 'பாததூளி' பிரிட்டிஷ் மண்ணிலே விழச்செய்ய இயலும் என்று நம்பிக்கை கொண்டனர்.

போப்பாண்டவரின் பிரதிநிதியாக பான்சானி என்பவர் பிரிட்டனில் தங்கி, அரசியின் ஆதரவு பெற்று, கத்தோலிக்க மார்க்கத்தை மீண்டும் புகுத்த முயற்சித்தார். இந்த முயற்சியைப் பான்சானிக்குப் பிறகு கான் என்பவர் தொடர்ந்து நடத்தினர்; மக்கள் மருண்டனர்; லாட்கூட மருட்சி அடைய நேரிட்டது; மன்னனை லாட் எச்சரித்தார், மன்னன், யார் பக்கம் பேசுவது என்று தெரியாமல் திணற நேரிட்டது, மன்னனின் எதேச்சாதிகாரத்தைத் தடுத்திடாவிட்டால், கத்தோலிக்க மார்க்கத்தையும் சுமந்துதீரவேண்டி நேரிடும், என்று மக்கள் பயந்தனர்—பெரும்பாலோர், பிராடெஸ்ட்டென்டுகள்!

வென்ட்ஒர்த், பிரிட்டனில் அமுல் செய்தது போலவே ஐயர்லாந்து சென்று, அரசன் ஆணையை நிலைநாட்டினன். முறைகள் ஒரேவிதம், ஆனல் கடுமை மிக அதிகம். ஐயர்லாந்திலே, குடிஏறிக் கொட்டமடித்துவந்த பிரிட்டிஷாருக்கும், நிலமிழந்து நொந்துகிடந்த ஐயர்லந்து வாசிகளுக்கும் பூசல், பிரிட்டிஷாருக்கும் ஸ்காத்லந்துக்காரருக்கும் சச்சரவு, கத்தோலிக்கருக்கும் பிராடெஸ்ட்டென்டுகளுக்கும் போர்! வென்ட்ஒர்த் இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு கொடுங்கோலனுனன்.

ஐயர்லாந்தில் வென்ட்ஒர்த், அடித்து நொறுக்குகிருன், அரச ஆதிக்கத்தை வளரச்செய்கிருன், மக்கள் மடிந்தாலும் மன்னனுடைய நிலை உயரவேண்டும் என்று வேலைசெய்கிருன். பிரிட்டனில் லாட், மார்க்கத்துறையின் செல்வாக்கு அனைத்தையும் மன்னன் சார்பிலே திருப்பிவிடுவதுடன், அடக்குமுறையால், உரிமைக் கிளர்ச்சியை கருவறுத்த வண்ணமிருக்கிருன். வேங்கைகளால் துரத்தப்படும் மானினமாயினர் மக்கள்! துள்ளி வருகுது வேல்! என்று கூறும் நாள் வரவில்லை! இரத்த வெறிபிடித்தலையும் வேங்கைகள், தம் இனத்தவரின் உடல் சின்னு பின்னமாக்கப்படுவது கண்டு, மிரண்டு ஓடும் மானினம்! நாடு, காடு ஆயிற்று! இந்நிலையில், வேங்கைகளை வெந்து கருகிடச் செய்யவல்ல, பெரு நெருப்பை, மன்னனே மூட்டிட நேர்ந்தது—தெரிந்து அல்ல.

மன்னனுடைய போக்கு, பிரிட்டனில் எளிதாகப் புகுத்த முடிந்ததுபோல, ஸ்காத்லாந்தில் இயலவில்லை. மலைகளும் சிறு குன்றுகளும், இவைகளுக்கிடையே அமைந்த சிற்றூர்களில் வாழ்ந்துவந்த ஸ்காட்மக்கள், வீராவேசம் குன்றுமல் வாழ்ந்து வந்தனர். எளியவாழ்க்கை கடும் உழைப்பு, சாவுக்கு அஞ்சாத நெஞ்சத்தினர், நாடு வளமாகாததால், பலர், வெளிநாடுகளில் சென்று, படை வீரராகி, கீர்த்திமிக்கவராயினர். இந்த ஸ்காத்லாந்து நாட்டை, சார்லஸ், குத்திப்பார்த்தான்—குலைநடுக்கமெடுக்குமளவுக்குப் பகை ஈக்கினர்.

(தொடரும்)

# அரசியற் கருத்துக்கள்

**[ அன்று முதல் இன்று வரை ]**

[பேராசிரியர் இருதயராஜ்]

இவர்களுடைய இந்த வாதம் இங்கிலாந்தில் ஒரு பெரும் கருத்துப் புரட்சியையே ஏற்படுத்தியது. தொழிற்கட்சி என்ற அரசியல் கட்சி இவர்களுடைய கருத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டே தன்னுடைய திட்டங்களைத் தீட்டிச் செல்வாக்குத் தேட ஆரம்பித்தது. பிறகு ஆட்சியை கைப்பற்றும் சந்தர்ப்பம் ஏற்பட்ட நேரத்தில் இந்தக் கருத்துகளை ஆதாரமாகக் கொண்டு சமூக பாதுகாப்பு அளிக்கும் விதத்தில் வேலையில்லாதவர்கள், வயது முதிர்ந்தவர்கள், நோய்வாய்ப் பட்டவர்கள், கல்விகற்கும் வயதினர் ஆகியவருக்கெல்லாம் உபகாரச் சம்பளம் அளிக்கும் முறையில் மக்கள் நல ஆட்சி என்ற புதிய ஆட்சி முறையை இங்கிலாந்தில் புகுத்தினர். அரசாங்கம் மக்களைப் பாதுகாப்பது மட்டுமல்ல, அவர்களுக்குச் சேவைசெயது அவர்களுக்கு வேண்டிய வாழ்க்கைத் தேவைகளையும் வசதிகளையும பூர்த்திசெய்து அவர்களுடைய குறைகளை நிவர்த்தி செய்வதே அரசாங்கத்தின் கடமை என்ற இலட்சியத்தை தொழிற்கட்சி நடைமுறையில் செய்து காட்டியது.

## பொதுவுடைமை

புரட்சியின்றி, ஜனநாயகத்தின் அமைப்பு முறைகளை வைத்துக் கொண்டே, சாவதானமாகச் சட்ட ரீதியாக சமதர்ம சமுதாயத்தை நிறுவ முடியும் என்று பேபியன் சோஷலிஸ்டுகள் கருதுவதற்கு முரணாக, பலாத்காரப் புரட்சியினாலன்றிப் பொது உடைமையையும் அதற்கு அடிகோலும் பாட்டாளிகளின் இராச்சியத்தையும் ஸ்தாபிப்பது முடியாது என்று கூறுபவர்கள் பொது உடைமை வாதிகளெனப்படும் கம்யூனிஸ்டுகள்.

அவர்களுடைய இலட்சியம் சமுதாயத்தில் புரட்சி செய்வது. முதலாளித்துவ அரசாங்க அமைப்பைக் கைப்பற்றுவது, பாட்டாளிகளின் சர்வாதிகாரத்தை ஸ்தாபிப்பது, உற்பத்தி சாதனங்களையும் அவைகளின் பயனைப் பகிர்ந்து கொடுக்கும் சாதனங்களையும் பொதுச் சொத்தாக்குவது, பாட்டாளி, பணக்காரன், எஜமான் அடிமை, என்ற வர்க்கங்களற்ற பொருளாதார சமத்துவத்தையுடைய சமுதாயத்தை உருவாக்குவது என்பவைகளே.

பலாத்காரத்தில் அவர்கள் அவ்வளவு நம்பிக்கை வைத்திருப்பதற்குக் காரணம், அவர்கள் நினைக்கிறார்கள், அரசு அரசாங்கம் என்பவை யெல்லாம் வெறும் அடக்கு முறை சாதனங்களே என்று. எனவே, அரசைக் கவிழ்த்தாலொழிய சுதந்தரம் ஏட்டளவில்தான் மக்களுக்கு இருக்கும் என்று வாதாடுகின்றனர்.

முதலாளித்துவ அரசில் நீதி என்பது முதலாளிகள் எதை நீதியென்று நினைக்கிறார்களோ அதுவாகத்தான் இருக்க முடியும் என்கிறார்கள் கம்யூனிஸ்டுகள். அங்கு ஆளை அவமதிப்பது குற்றமாகக் கருதப்படாது. மனிதனை மனிதன் சுரண்டுவதும், மரியாதைக் குறைவாக நடத்துவதும் சர்வசாதாரணமாயிருக்கும். ஆனால் சொத்துக்கு மதிப்புத் தராமலிருப்பது, பணத்துக்குப் பணியாமலிருப்பது பெருங் குற்றமாகக் கருதப்பட்டு தண்டனை தரப்படும். எனவே முதலாளித்துவ அரசில் மனிதன் மானத்துடன் வாழ முடியாது, ஏழைகளுக்கு நியாயம் கிடைக்காது என்ற முடிவுக்கு கம்யூனிஸ்டுகள் வருகிறார்கள்.

முதலாளித்துவ அரசில், பலம் பொருந்திய சிலர், பெரும்பான்மையோர் மேல் ஆதிக்கஞ் செலுத்துவதால் நியாயமோ, சமத்துவமோ அங்கு இருக்கமுடியாது. அரசு என்றாலே அடக்குமுறை, பலாத்காரம் என்பதுதான் பொருள். இதைப பலாத்காரத்தைக்கொண்டுதான் எதிர்த்து தொழிலாளர் அரசைக் கைப்பற்ற வேண்டும் என்பது கம்யூனிஸ்டுக் கொள்கை.

"சமாதானமாக, சட்டரீதியில் சீர்திருத்தங்களின் மூலம், பாட்டாளிகள் ஆட்சியில் பங்கு பெறவோ அல்லது இறுதியில் ஆட்சியைக் கைப்பற்றவோ நினைப்பது வெறுங்கனவு, வீண் முயற்சி. காரணம், தொழிலாளருக்குள்ளே ஒற்றுமைப் பண்பும் வர்க்க உணர்ச்சியும் கிடையாது. அப்படியே அவர்கள் ஒரு சமயத்தில் ஒன்றுபட்டு எழுந்தாலும், புதிதாக முளைத்திருக்கும் நடுத்தர வர்க்கம் முட்டுக்கட்டையாக இருந்து தொழிலாளரைப் பதவிக்கு வர விடாது. மேலும் தொழிலாளர் அநேகமாகத் தங்கள் நிலையைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ளவேண்டும் என்ற அக்கரையே இல்லாதவர்கள். அது மட்டுமல்ல அரசாங்கத்துக்குப் படையும் போலீசும் இருக்கிறது தொழிலாளர் கிளர்ச்சிகளை அடக்குவதற்கு. முதலாளிகள் தீட்டிய சட்டங்களை அமுல் நடத்துவதற்கு அவர்களுடைய கையாட்களான நீதிபதிகள் இருக்கின்றனர். கல்வி நிலையங்கள், மதஸ்தாபனங்கள் அத்தனையும் முதலாளிகளின் பக்கம். இந்தச் சூழ்நிலையில் சட்டபூர்வமான, சாவதானமான முறைகள் அல்ல-பலாத்கார முறைதான் பயனளிக்கும்" என்கிறார்கள் கம்யூனிஸ்டுகள்.

மேலும் அவர்கள் ஆதாரங் காட்டுகின்றனர், பலாத்காரத்தை உபயோகிப்பது புதிதல்ல. அரசு என்று முதலில் தோன்றியபோதே பலாத்காரந்தான் உபயோகப்பட்டது. அரசு என்ற அமைப்பு அழி

## பைத்யக்காரி

கேட்டாயா ஒரு அக்ரமத்தை! பகல்பூர் எனும் இடத்தில், ஒரு இளமங்கை வழிப்பறி செய்தாளாம்—அந்த வழியே வந்த ஒரு கிராமத்தானிடம்! கட்டாரியைக் காட்டி, குத்திக் கொன்றுவிடுவேன் என்று சொல்லி பயமூட்டி, கிராமத்தானிடமிருந்த மூட்டையைப் பறித்தாளாம்—சென்ற கிழமை. ஆனால் அதற்குள் அந்த வழியே வந்த சில மாணவர்கள், இதைக் கண்டு, இவ்வளவு துடுக்குத்தனமாக ஆடவர்களைக் கொள்ளையடிக்கும் பெண்ணின் அக்ரமத்தைக் கண்டு ஆத்திரம் கொண்டு அவளைத் துரத்திப் பிடித்து, போலீசில் ஒப்புவித்திருக்கிறார்கள், என்றோர் செய்தி வெளிவந்திருக்கிறது.

"பைத்யக்காரி சார்! இந்தப் பெண்!" என்கிறார், என் நண்பர்.

"பைத்யக்காரியா! கொள்ளைக்காரி" என்கிறேன், நான்.

"கட்டாரியைக் காட்டுவானேன், கைதியாகித் தவிப்பானேன்! கண் போதாதா!!" என்கிறார், நண்பர்!

யாமலிருப்பதே பலாத்காரத்தின் துணைகொண்டுதான் என்கிருர்கள்.

தொழிலாளர் வாழ்வை வளமாக்குவது—வர்க்கபேதமற்ற சமுதாயத்தை சமைப்பது — சமத்துவத்தை நிலைநாட்டுவது — இவ்வளவு உன்னத நோக்கங்களை, சிறந்த இலட்சியத்தை அடைய எந்த முறையைக் கையாண்டாலென்ன? இது கம்யூனிஸ்டுகளின் கேள்வி. பலாத்காரமாயிருந்தாலுங்கூட அது தேவைப்பட்டால், அதைக் கையாளுவதில் தவறொன்றுமில்லை என்று நினைக்கிருர்கள் அவர்கள்.

நல்லது, கெட்டது என்ற தத்துவார்த்தமெல்லாம் மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட நியதிகள்தானே? அவைகள் மாற்றவே கூடாத தன்னிலேயே புனிதத் தன்மை பெற்றவைகளா? ஆண்டான் தனது அடிமைகளை அடக்கி வைத்திருப்பதற்குச் சாதகமாக வகுத்துக் கொண்டதே நல்லவை, கெட்டவை என்ற பாகுபாடுகள். இந்த வேற்றுமைகளை அடிமைகளும் நிரந்தரமாக ஏற்றுக்கொண்டு 'பலாத்காரம் கெட்டது, அதனுல் அது கூடாது' என்று நம்பிக்கொண்டிருந்தால், அவர்களுக்கு விமோசனம் எங்கே? என்று சொல்லிக் கம்யூனிஸ்டுகள் பலாத்காரத்தைத் தூண்டுகிருர்கள்.

பலாத்காரத்தை ஆதரிக்கும் இவர்கள் எப்பொழுதும் இதை ஆதரிக்கிருர்களா என்ருல், அதுதான் இல்லை. பாட்டாளிகளின் சர்வாதிகாரத்தை நிலைநாட்ட, முதலாளிகளைப் பிறகு கிளர்ச்சி செய்யாமல் அடக்கிவைத்திருக்க, கம்யூனிஸ்டுகள் தங்கள் பலாத்காரத்தைப் பிரயோகிப்பது அவசியம் தேவையானது என்று கருதுகிருர்கள். ஆனுல் கம்யூனிஸ்டுகளை அடக்குவதற்கு அல்லது அவர்களுடைய பலாத்காரக் கிளர்ச்சிகளைத் தடுப்பதற்கு அடக்குமுறை மற்றவர்களால் உபயோகப்பட்டால் அது பிற்போக்காளரின் சூழ்ச்சி, என்றும் சமூகத்தை வளரவிடாமல், அதைப் பிற்போக்கு நிலையிலேயே வைத்திருக்க வேண்டும் என்ற சூது நோக்கங்கொண்ட சுயநலமிகள் ஆயுதம் பலாத்காரம் என்றும் சொல்லி அதைக் கண்டிப்பார்கள். கம்யூனிஸ்டுகளை விட்டுவிட்டு மற்றவர்களை எந்த அரசாங்கமாவது பலாத்காரத்தினுல் அடக்கினுல், அதைப்பற்றி கம்யூனிஸ்டுகள் கவலைப்படமாட்டார்கள், கண்டிக்கவும் முன்வரமாட்டார்கள்.

இதே முரண்பாடு மேலும் அவர்களுடைய விவாதத்தில் காணப்படுகிறது. அரசு என்பது அடக்குமுறைச் சாதனம், சர்வாதிகாரத்தின் சின்னம், ஆகவே அதை அழித்துவிடவேண்டும் என்று சொல்லுகிருர்கள். ஆனுல் முதலாளிகளை முறியடித்துப் பாட்டாளிகளின் இராச்சியத்தை ஏற்படுத்தியதும், சொத்தைப்பறிகொடுத்துவிட்ட முதலாளிகள், இழந்ததை மீண்டும் பெற முயற்சிக்காமல் அவர்களை அடக்கிவைத்திருக்க அரசு போன்ற ஒரு அமைப்புத் தேவை என்றும் சொல்லுகிருர்கள்.

ஆனுல் சமாதானம் சொல்லுகிருர்கள், இந்த அரசு ஒரு குறிப்பிட்ட காலந்தான் இருக்கும் என்று. அதாவது பொது உடைமை ஏற்படும் வரை. அந்த இடைக்காலம் எவ்வளவு நாளைக்கு நீடிக்கும்? யாரும் சொல்லமுடியாது. ரஷ்யாவில் *1918*-ல் புரட்சி ஏற்பட்டது. பாட்டாளிகளின் இராச்சியம் ஏற்பட்டது. ஆனுல் இன்றுவரை

## வயலுக்கு நீர் பாய்ச்சினுர்!

கங்கை நதியில், பார்ப்பனர், நீரை எடுத்து கிழக்கு திசையை நோக்கி இறைத்துக்கொண்டு, ஏதோ மந்திரத்தை முணுமுணுத்துக்கொண்டு இருந்தனர்.

ஒருவர், கங்கையில் இறங்கினுர்; கையில் தண்ணீரை எடுத்து, மேற்குத் திக்கு நோக்கி இறைத்திடலானுர்.

பார்ப்பனர் கிழக்கு நோக்கி, கங்கா ஜலத்தை இறைக்க, அதே இடத்தில் இருந்துகொண்டுமேற்கு நோக்கி கங்கா ஜலத்தை இறைத்துக்கொண்டிருப்பது, ஏதோ, வேண்டுமென்றே கேலி செய்வது போல இருந்தது.

பார்ப்பனருக்குக் கடுங்கோபம் பிறந்தது!

“ஏலே! பயலே! யார்நீ? என்ன காரியம் செய்கிருய்?” என்று அதிகாரக் குரலில் கேட்டனர்.

அஞ்சா நெஞ்சுடன் அந்த ஆசாமி கேட்டார், “நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்” என்று.

“மூடா! இது தெரியவில்லை! பூஜை செய்கிருேம்-பிதுர்க்களுக்கு-அதற்காகத்தான் கங்கா ஜலத்தை கிழக்கு நோக்கி இறைக்கிருேம்” என்று கூறினர். விளக்கம் உரைத்ததாக எண்ணிக் கொண்டனர்.

“அப்படியா! நானும் காரியமாகத்தான் இதைச் செய்கிறேன்.” என்று கூறிவிட்டு, மேற்கு திசை நோக்கி தண்ணீரை வாரி இறைத்தான்.

“மண்டு! பிதுர்க்களுக்கு கிழக்கு திசையில்தான் தண்ணீர் இறைப்பது— அதுதான் சாஸ்திரம்!” என்று புத்தி கூறினர் பார்ப்பனர்.

“கங்காதீர்த்தம் பிதுர்க்களுக்கு, கிழக்கே இறைத்தால் போய்ச் சேரும்—அப்படித்தானே” என்று கேட்டான் அப்பாவிபோல!

“ஆமாமடா! அசடே!” என்று பார்ப்பனர், பண்டித பாஷையில் பேசினர்.

“என் கிராமம், மேற்குப்பக்கம் இருக்கிறது—அங்குள்ள என் வயலுக்குத்தான் நான் தண்ணீர் இறைக்கிறேன்” என்ருன் அந்த ஆசாமி.

“உன் கிராமத்து வயலுக்கு...... ஏடா! பைத்யக்காரா! இங்கே தண்ணீர் இறைக்கிருயா...இங்கே இறைத்தால், உன் வயல் எங்கே இருக்கிறது, எங்கோ கிராமத்தில் அங்கு பாயுமா! அட பைத்யக்காரா! பைத்யக்காரா!!” என்று பார்ப்பனர் கேலி செய்தனர்.

“மேதாவிகளே! எங்கோ இருக்கும் பிதுர்லோகம் வரையில், நீங்கள் இங்கே இறைக்கும் கங்கா நீர் போகும்போது, நான் இங்கே இறைக்கும் அதே கங்கா ஜலம், மேற்கே உள்ள என் வயலுக்கா பாயாது?” என்று கேட்டான் அந்த ஆசாமி. பார்ப்பனர், வாயடைத்து நின்றனர்! பார்ப்பனரின் சாஸ்திரியமான பைத்யக்காரத்தனத்தைக் கண்டு பலரும் கைகொட்டி நகைத்தனர்.

சிந்தித்துப்பாருங்களய்யா, செல்லரித்துப்போன ஏடுகளைச் சுமந்து கொண்டு அதனுலேயே செருக்கு முற்றிக்கிடக்கும் சாஸ்திரிகளே! —என்று கூறுவதுபோலப் பார்த்தார், பகுத்தறிவுபேசிப் பார்ப்பனர் வாயை அடக்கியவர்!

அவர்தான், சீக்கியர்களின் குரு—குருநானக் என்பவர்!

இந்துவாகத்தான் பிறந்தார்—பிறகு இந்துமத ஆபாசங்களை அறிந்து அதைவிட்டு வெளிஏறி, சீலம் நிரம்பிய அறிவுமார்க்கத்தைச் சீக்கியருக்கு அளித்தார். குருநானக்கின், வாழ்க்கையிலே நடைபெற்ற சம்பவங்களிலே ஒன்றுதான், கங்கைக்கரையில் கனபாடிகளின் கர்வத்தை அடக்கிய இந்த நிகழ்ச்சி,

அந்த இடைக்கால சர்வாதிகார அரசு இருந்துதான் வருகிறது. கூடிய சீக்கிரத்தில் வருங்காலத்தில் அது மறையப் போவதாகவும் தெரியவில்லை.

எங்கு வர்க்கமற்ற சமுதாயம் ஏற்பட்டு விடுகிறதோ அங்கு யாரையும் அடக்க அவசியமிருக்காது. அவசியமில்லாது தானே அழிந்துவிடும். இலையுதிர் காலத்தில் மரத்தில் இலைகள் தானே உதிர்ந்துவிடுவதுபோல அரசும் உதிர்ந்து மறைந்துவிடும்.

அரசு மறைந்து அதற்குப்பின் ஏற்படும் மக்கள் கூட்டு வாழ்க்கையில் அவரவர்களுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆங்காங்கே தேவைப்படும் வாழ்க்கை வசதிகளைத் தேடிக் கொடுப்பார்கள். பதவி என்பது சேவை என்று மாறிவிடும். ஆகவே பதவிப்பித்தும் அதற்குப் போட்டியும் ஏற்பட வழியில்லை. சட்டம் அல்லது அரசாணை என்ற எதற்கும் கீழ்ப்படிய வேண்டியிராது. ஆங்காங்கே வாழும் மக்கள் அவரவர்கள் தாங்களாகவே ஏற்படுத்திக்கொள்ளும் சில நியதிகளை, வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுவார்கள் — உற்பத்திசெய்வது அதை சமமாகப் பகிர்ந்து கொள்வது என்பதில் அவர்கள் சுதந்தரமாக ஒப்பந்தம் செய்துகொண்டு வாழ்வார்கள். இதுதான் கம்யூனிஸ்டுகளின் திட்டம்.

“இங்கிலாந்தில் தொழில் வளர்ச்சியின் விளைவால் வர்க்கப் பகை வளரும். அதன் முடிவு வர்க்கப் போர்—புரட்சி—அதிலிருந்துதான் பாட்டாளிகளின் இராச்சியம் உருவாகும்” என்றார் மார்க்ஸ். ஆனால் புரட்சி இங்கிலாந்தில்ஏற்படவில்லை.

எதிர்பாராத இடத்தில் 1918-ல் ரஷ்யாவில் தொழில் வளர்ச்சி அதிகமில்லாத அந்த நாட்டில், புரட்சி ஏற்பட்டது. அங்கும் வர்க்கப்போர் அல்ல புரட்சிக்குக் காரணம். முதல் உலகப்போரில் ரஷ்யப் படைகள் ஜெர்மானியர்களால் தோற்கடிக்கப்பட்டது, ஜார் மன்னனின் கொடுங்கோல் ஆட்சியில் மக்கள் குமுறியது, பட்டத்தரசியும், ரஸ்புடீன் என்ற மத குருவும் மக்கள் வெறுக்கும் விதத்தில் மன்னனை ஆட்டிவைத்தது, போருக்குச் சென்று திரும்பிய படையாட்கள் விளைவித்த கலகம், இத்தனையும் சேர்ந்துதான் ரஷ்யாவில் புரட்சியைப் புகுத்தின. (தொடரும்)

# காணி நிலம் வேண்டும்!

-[ வானன் ]-

“ஸ்ரீமன் நாராயணமூர்த்தி வாமனாவதாரம் எடுத்து மகாபலியிடம் மூன்றடி மண் கேட்டு அவன் கொட்டத்தை அடக்கினார் தெரியுமா?”

“நன்றாகத் தெரியும்! ஆனால் அதைவிட இன்னொன்றும் நன்றாகத் தெரியும்! அந்த மகாவிஷ்ணு வாமனாவதாரம் எடுத்து மகாபலியை அழித்து உலகத்தை அரக்கர்களிடமிருந்து மீட்டார்; ஆனால் அந்த உலகம் மறுபடியும் யாரிடம் போனது தெரியுமோ? இரண்யன், இராவணன், கம்சன் இத்தியாதி அரக்கர்களிடம் தான் போனது! உங்கள் விஷ்ணுவின் அவதாரங்கள் எப்படிப் பயனில்லாமல் போயின என்பதைத்தான் கூற வந்தேன்!”

* * *

ஆச்சாரியா விநோபா பாவேயின் ‘பூமி தான’ இயக்கத்தைக் கண்டித்து இருக்கிறார், நேருவின் சீடர், பம்பாய் கவர்னர் ஹரி கிருஷ்ண மெஹ்தாப்.

நாட்டின் அதிகாரம் கையிலே இருக்கிறது. சட்டம் ஆற்றும் சபையில் பரிபூரண மெஜாரிட்டி இருக்கிறது. சோஷியலிச மாதிரியான சமுதாயம் அமைப்பதே எங்கள் குறிக்கோள் என்றும் சொல்லியாகிவிட்டது. இருந்தும் ஒரு சிறு சட்டத்தின் மூலம் தீரவேண்டிய நிலப் பிரச்னையை இப்படி இயக்கமாக்கி இதற்குத் தாடியும், தடியும் கொண்டு நாடு சுற்றுவானேன் என்று நாம் வியப்பதுண்டு. காங்கிரஸ் தலைவர்களே இந்த அரை வேட்டி கட்டிய காந்தியாரின் சீடரின் பிரச்சாரத்தைக் கண்டு கிலி கொண்டனர் என்றும் பொருமை கொண்டுள்ளனர் என்றும் செய்திகள் வந்தன. இந்த அதிருப்தியை அதிகப்படுத்த எண்ணித்தானோ, என்னவோ, ஜெயப்பிரகாஷ் நாராயணன் கூடத் தன் சோஷியலிஸ்ட் கட்சிக்கு வணக்கம் கூறிவிட்டு, பூமிதான இயக்கத்தில் இரண்டற ஐக்கியமானார். இப்படி ஒரு சக்தி வளருவதையும், இதற்கும் காங்கிரசுக்கும் சம்பந்தம் குறைவதையும் கண்ட பண்டிதர் நேரு தமக்கிருந்த பல அலுவல்களுக்கிடையே, பெர்ஹம்பூர் காங்கிரசுக்கு விநோபாபாவை வரவழைத்து அங்கு அவருடன் கலந்து பேசி, “ஆவடியில் நிறைவேற்றப்பட்ட சோஷியலிச மாதிரியான சமுதாய அமைப்புத் தீர்மானத்திற்கும் விநோபாவின் பூமிதான இயக்கத்திற்கும் எந்த மாறுபாடுமில்லை; உண்மையில் அந்தத் தீர்மானத்தின் ஆரம்பவேலை இது” என்று அறிவித்தார். இந்த பூமிதான இயக்கம் பலனற்றது என்று கூறியிருக்கிறார், முன்னாள் மந்திரி, இன்றைய கவர்னர் ஹரி கிருஷ்ணமெஹ்தாப்.

“நாட்டின் வறுமையைப் போக்க இந்தத் திட்டம் வழியாகாது. வறுமையைப் பகிர்ந்து கொள்கிறோமே தவிர, அதை அழிக்கும் வழி இதுவல்ல!” என்று திட்டவட்டமாகக் கூறுகிறார் காங்கிரஸ் தலைவர் மெஹ்தாப். இதோடு விட்டுவிட்டால் அவருடைய கருத்து வேறுபாட்டைக் கூறினார் என்று கருதலாம்.

“ஒரிசாவிலே விநோபாபாவே சுற்றுப் பயணம் செய்து கொண்டிருக்கும்போது அவருக்கு அளித்த வரவேற்பும், அதற்கு அரசாங்கம் செய்த அபரிமித செலவும் ஆடம்பரமும் என்னைத் திடுக்கிடச் செய்தன. இந்தப் பூமிதான இயக்கம் நாட்டின் வறுமைதீர்க்கும் திட்டமாகாது என்றுநான் ஒரு கடிதம் கூட எழுதினேன். அதற்கு பதில் “உன் கடிதம் கிடைத்தது” என்று வந்ததே தவிர, நான் கூறியதை மறுத்தோ அன்றி என்னுடன் விவாதிக்க அவர் தயார் என்றோ பதில் கிடையாது!” என்று கோபமாகக் கூறியிருக்கிறார் மெஹ்தாப்.

மெஹ்தாப் இப்படி எந்தக் காரணத்தினால் கூறியிருந்தாலும், பொருந்தாத் திட்டத்தைத் தெளிவாக ஒதுக்கித்தள்ள மெஹ்தாப் முன்வந்தது கவனிக்கத்தக்கது. மெஹ்தாபின் வார்த்தைகள் தேசியத் தோழர்களை சிந்திக்கவாவது வைக்கட்டும்.

## விதி!

சந்திரசேகரசாஸ்திரி:- என்ன செய்வது முதலியாரவாள்! பிராப்தம் அவ்வளவுதான்! உங்களுடைய போருத வேளை என்றுதான் இதைச் சொல்ல வேணும்.

ஜம்புலிங்க முதலியார்:- ஒரு துளியும் எதிர்பார்க்கவேயில்லை. விலை ஏறும், ஏறும் என்றுதான், வியாபார நோட்டம் தெரிந்தவாளெல்லாம் சொன்னார்கள். நானும் இது விஷயமாக, சகல அயிட்டத்தையும் சிரமப்பட்டு விசாரித்து, மனதுக்கு ஒரு தெளிவும் நம்பிக்கையும் ஏற்பட்ட பிறகுதான் ஐயாயிரம் மூட்டை 'ஸ்டாக்' செய்தேன்- வயிறு பகீர் என்கிறது—மூட்டைக்கு முப்பது உள்ளுக்குப் பாடுதே—ஐமுப்பது.....நினைச்சாலே நடுக்கமெடுக்குது.......

சந்:- என்ன செய்வதப்பா, என்ன செய்வது! விதி! வேறே என்ன இருக்கு சொல்ல! விதி!!

உலகத்தின் ஆரம்பத்திலே நிலம் காடு கரம்பாக இருந்தது. பகுத்தறிவு கொண்ட மனிதன் அதைத் திருத்திக் காட்டை நாடாக்கி, கரம்பை உழுது நிலமாக்கி விளைச்சல் செய்து, உண்பதற்கு நெல் கண்டான். ஆரம்பகாலங்களில் சோம்பித் திரிந்த மனிதன் சுறுசுறுப்பாகி, பயிரை வளர்த்து நெல்லை அறுத்தபோது சமுதாயமாக மாறினான். அந்தக் காலத்திலேதான் பாதுகாப்பாளன் தோன்றினான். அவனே பின்னால் அரசனானான். அவனுக்குப் பக்கத் துணையாக நிலச்சுவான்தார்கள் தோன்றினர். ஆனால் அந்தக்காலத்தில்கூட அளவில் குறைந்த அரைக்காணி, கால்காணி நிலம்வைத்துக் கொண்டு, தானே உழுது தானே சாப்பிட்ட மனிதன் இருக்கத்தான் செய்தான். ஆனால் சமுதாயத்தின் முறைக்கேற்ப செய்யவேண்டிய பெரும் செலவுகள் (திருமணம், இறந்தவர் நினைவு) அவனைக் கடனாளியாக்கின. நாட்டில் ஏற்படக்கூடிய பஞ்சங்கள் அவனைப்பெரும் நிலச்சுவான்தாரிடம் அடைக்கலம் புகச் செய்தது. நோய், பிணிமுதலியவை அவனிடமிருந்த நிலத்தை, பெரிய மிராசுதாரனிடம் கொடுக்கச் சொல்லியது. இப்படிப் பல்வேறு காரணங்களால்தான் சிறு சிறு நில உரிமையாளர்கள் அழிந்து பெரும் நிலச்சுவான்தார்கள் தோன்றினர்.

பல நூற்றாண்டுகளாக ஏற்பட்ட மாறுதல் இது. உழுபவர் பலரும் அதை உண்டு கொழுப்பவர் சிலரும் என்ற நிலை. இந்த நிலை மாறி உழுபவனுக்கு நிலம் சொந்தமாக வேண்டும் என்ற உயர்ந்த கொள்கையை யாரும் மறுக்கமுடியாது. வினோபாவின் திட்டம் அந்த நிலையை உண்டாக்குமா? என்றுமெஹ்தாப்கேட்கிறார். நியாயமான கேள்வி.

வாமனவாதாரத்தின் மகிமையைப் பற்றி வீர சைவன் வைஷ்ணவனுக்குக் கூறியதுபோல, இன்றைக்கு, சில ஆயிரம் ஏக்கர் நிலங்களை வாங்கி அதைப் பல ஆயிரம் உழவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டால் மாத்திரம் பிரச்னை தீர்ந்துவிடுமா? ஆரம்ப காலத்தில் சமுதாயத்தில் ஏற்பட்ட மாறுதல் எப்படி மறுபடியும் ஏற்படாமல் போகும்? சிறு அளவு நிலங்களை வாங்கியவன் அதே நிலங்களை மறுபடியும் சில ஆண்டுகளில் பெரிய நிலச்சுவான்தார்களிடம் தன் நிலத்தை விற்க அவசியமில்லாத சமூகச் சூழ்நிலை ஏற்பட்டுவிட்டதா? நாட்டின் நிலையை ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு அந்த நிலை ஏற்படவில்லை என்பது நன்கு தெரியும். இதோடு பூமிதான இயக்கத்தின் முன் நிற்கும் மற்றொரு முக்கிய பிரச்னையும் கவனிக்கப்படவேண்டும், இந்த இயக்கத்திற்குக் கிடைத்திருக்கும் பெரும்பாலான நிலங்கள் காடுகளும், கரம்புகளும் என்று கூறுகிறார்கள். உழவன் எவனும் அந்த நிலங்களிலே நாளைக்கே பயிர் செய்ய முடியாது. காட்டையும், கரம்பையும் திருத்தி, வயலாக்கக் கோடிக்கணக்கில் பணம் தேவைப்படும். அதற்குப்பின் வெறும் நிலத்தைக் கொடுத்தால் அதனை உழவன் ஏது செய்வான்? அவனுக்குக் குறைந்தது இரண்டு மாடுகளும், ஒரு ஏர்கலப்பையும், ஆரம்ப ஆண்டுக்குச் சாகுபடி செலவுக்குப் பணமும் கொடுத்தாக வேண்டும். "இந்தச் செலவுகளுக்குக் கோடிக் கணக்கில் பொருள் தேவைப்படுகிறது. இப்பொழுது எனக்குத் தெரிந்த ஓரிரு மில் முதலாளிகள் சிறிதளவு பொருள் கொடுத்திருக்கின்றனர். ஆனால் இது போதாது, இதுபோல இன்னும் பல மடங்கு தேவைப்படும்" என்று ஜெயப்பிரகாஷ் நாராயணனே கூறியிருக்கிறார். உழவனுக்குப் பண்படுத்தப் பட்ட நிலம் வேண்டும். அதோடு அதில் உழுது பயிரிட வசதிகள் வேண்டும். ஆனால் இவைகள்கூட இந்த நாட்டின் வருங்காலத்தை மாற்றியமைக்குமா?

விவசாயத்தை நம்பி வாழ்ந்த நாடுகளில், நிலை என்னவாகிறது? விவசாயத்தின்மூலம் ஒரு குறிப்பிட்ட அளவு செல்வத்தைத்தான் உற்பத்திசெய்யமுடிகிறது. அந்தச் செல்வம், அந்த நாட்டு மக்களுடைய முழுத் தேவைகளையும் அளிக்கமுடிவதில்லை. அவர்களுக்கு எல்லா வசதிகளையும் தரத் தொழில்துறையில் அந்நாடு முன்னேறவேண்டும். ஆலைகளும், தொழிற்சாலைகளும்தான் அவனுடைய தேவைக்குமேல் செல்வத்தை அள்ளித் தருகின்றன. சுரங்கங்கள் தோண்டினால்தான் செல்வம் கிடைக்கிறது. நாவாய் ஓட்டினால்தான் நாடு வளர்கிறது. இதன்றி, வெறும்நிலங்களைப் பங்கு போட்டுத் தலைக்குச் சரியாகப் பிரித்துக் கொடுப்பதால்மட்டும் நாடு வளமுற்றதாகாது; தொழில் வளர வேண்டும். இதை எண்ணித்தான் மெஹ்தாப் பூமிதான இயக்கம் எந்தப் பிரச்னையையும் தீர்க்காது என்று கூறினார்போலும்.

ஆனால், இப்படிக் கூறுவதால் நிலச்சுவான்தார்களை ஒழிக்கக் கூடாதென்றோ, சமூக நியாயமான நிலப் பங்கீடு வேண்டாமென்றோ நாம் கூறவில்லை.

சக்திக்கேற்றபடியும், தேவையான அளவும் நிலம் பங்கிட்டுக் கொடுக்கப்படவேண்டியது தான். அது செய்யாதவரை நாட்டிலே இருக்கும் சமுதாய ஏற்றத்தாழ்வுகளை நிச்சயமாக ஒழிக்க முடியாது. ஆனால் அதைச் செய்தால் மாத்திரம் போதாது. உதாரணத்திற்குத் தஞ்சை மாவட்டத்தைப் பாருங்களேன். காவிரிபாயும் செந்நெல் பூமி. வற்றாத நதியால் பல்லாண்டுகளாக வளத்தோடு இருக்கும் மாவட்டம். ஆனால் கோவை மாவட்டத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள்! அதுபோலவே வடநாட்டையும் தென்னாட்டையும் ஒப்பிட்டுப்பாருங்கள். தென்னாட்டிலே நிலச்சுவான்தார் — குடியானவன் சண்டைதான் மிச்சம். வடக்கே வளர்ந்துள்ள ஆலைகள், நிலத்தினுடைய முக்கியத்துவத்தையே குறைத்து விட்டன,

எந்த நாட்டிலேயும் தொழில் வளம் பெருகிய பின்தான் நாகரிகம் வளர்ந்து முன்னேற்றம் ஏற்பட்டது. இதை உணர்ந்துதானே, என்னவோ மெஹ்தாப் பூதான இயக்கம் கொஞ்சமும் பலனற்றது என்று கூறிவிட்டார். சிந்தித்துப் பொருள் காணவேண்டிய வார்த்தைகள்.

"காணிநிலம் வேண்டும்" என்றார் பாரதியார். உண்மை. ஆனால் கவிஞன் அந்தக் காணி நிலத்திலே ஒரு பக்கத்திலே தென்னையும், மற்றொரு பக்கத்திலே மல்லிகையும், முல்லையும் பூத்த மலர்ச்சோலையும் இன்னபிற இன்ப சூழ்நிலையும் வேண்டும் என்றான். அந்தக் கவிஞனின் வாக்கை நிறைவேற்ற எண்ணங்கொண்ட எவரும் காணி நிலம் தரப் பாடுபட்டு வெற்றி பெற்றுவிட்டால் மட்டும்போதாது. அந்தக் காணி நிலத்தை சோலையாக்கவும் திட்டம் தயாரிக்க வேண்டும், மெஹ்தாபின் உரைகள் அந்த சிந்தனையைத்தான் தூண்ட உதவ வேண்டும்.

★

## திமிர்!

மணிகண்ட பிள்ளை:– என்ன சாமி! ஜெம்புலிங்கம் மூலையிலே உட்கார்ந்துகிட்டு அழுறானுமே!

சந்திரசேகரர்:– ஆமாம்! மூட்டைக்கு முப்பது நஷ்டமாகுதாம்–ஐயாயிரம் மூட்டை கிடங்கிலே! ஆசாமி என்ன செய்வன்! இஞ்சி தின்ன குரங்கா இருக்கருன்.

மணி:– என்ன செய்றது, எல்லாம் என் விதின்னு சொல்லிப் புலம்பறானுமே......

சந்தி:– திமிர் பிடிச்சு ஆடறது, கண் மண் தெரியாமப்படிக்கு. பேராசை பிடிச்சு அலையறது பிசாசுபோல. பைத்யக்காரத்தனமா போய் மாட்டிண்டுவிடறது. பிற்பாடு, விதி விதின்னு சொல்லி அழறது, இது என்ன வேலை! ஏம்பா! இதெல்லாமா விதி? திமிர்; தான் என்கிற அகம்பாவம்! பணம் இருக்கு ஏராளமாக; வாங்கி 'ஸ்டாக்' செய்துவைப்போம் — மத்தவனுடைவாயிலேயும் வயித்திலேயும் அடிச்சி, நாம இலாபம் குவிப்போம் என்கிறபேராசை! திமிருக்கும் பேராசைக்கும் விதின்னு பேரா? விதியாம் விதி! திமிரப்பா, திமிர்!

# வாணவேடிக்கை!

"ஏனப்பா, முன்னேற்றம்! பத்திரிகையைப் பார்த்தயோ! தூக்கி வாரிப் போட்டிருக்குமே! என்ன சொல்கிறே இப்போது? இப்பவாவது ஒத்துக்கொள்கிருயா, எங்களுடைய விஷயமே, பிரமாதமாத்தான் இருக்கும் என்பதை. நாங்கள் செய்வதுபோல பிரம்மாண்டமான காரியத்தை உங்களாலே செய்ய முடியாது என்பதை இப்போதாவது தெரிந்து கொண்டாயா?" என்று புதுத்தெம்புடன் கேட்டார், புண்யகோடீஸ்வர ஐயர்.

"சரி ஐயா! பிரமாதம்—ரொம்பப் பிரமாதம்! ரொம்பரொம்பப் பிரமாதம் உம்மோட கரியம்—ஆனல் அதனலே என்ன பலன்? அதைச் சொல்லவேணுமே" என்று நான் கேட்டேன்.

"பலன் வருகிறபடி வரட்டும்—வராமலே போகட்டும்—எனக்கு அது முக்கியமில்லே—காரியம் எப்படி பகுஜோரா இருந்ததா இல்லையா" என்று அவர் கேட்டார்.

"ஐயா! உமது நம்பிக்கை, உற்சாகம், சந்தோஷம், ஆர்வம் இதை எல்லாம் குறைப்பதாகக் கருதிக் கொள்ள வேண்டாம். எனக்குப் பலன்தான் முக்கியம், பளபளப்பும் பரபரப்பும், பகட்டும் படாடோபமும் அல்ல" என்று கூறினேன்.

அதற்குமேல் அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அம்பலத்தரசன் விழாவிலே அவர் கண்ட காட்சி அவருக்கு ஓர் அலாதியான ஆவேசத்தைத் தந்துவிட்டிருந்தது.

"எப்போதும் நீ இப்படித்தான்! எத்தனை இலட்சம் மக்கள் தெரியுமா! கண்கொள்ளாக் காட்சி! மந்திரிகளெல்லாம் தெரிசனத்துக்காகத் தர்சானுதாசர்களாகக் காத்துக்கிடந்தார்கள். மகோன்னதமான உற்சவம்! அரகரமகாதேவா என்ற கோஷம் விண்ணைப் பிளந்தது! பக்தகோடிகள் பரவசமாகி நின்றனர்." என்று ஐயர் சிதம்பரம் கும்பாபிஷேகத்தின் சிறப்புகளைப் பற்றி வர்ணிக்கலானார்.

"ஐயா! இருளைப்போக்க, ஒரு சிறு அகல் விளக்குகிடைத்தாலும் போதும். ஆயிரக் கணக்கிலே பணம் செலவிட்டு வாணவேடிக்கை நடத்திக்காட்டி, எவ்வளவு அலங்காரமான ஒளிபார்த்தாயா, கோடி சூரியப் பிரகாசம்போல இருக்கிறதல்லவா, இதோபார் சுழல் வாணம் இதோ இந்தப் பக்கம் பார் இங்கி நிலத்தில் பூக்கள் உதிருவதை, அதுதான் சக்கரச்சட்டி, என்று வாணவேடிக்கையின் விமரிசையைக் காட்டினாலும், வாண வேடிக்கை நடைபெறுகிற வரையில்தான் ஒரு வெளிச்சம் தெரியும் —பிறகோ மீண்டும் அந்தகாரம் கவிந்துகொள்ளும்! கொஞ்சநேரம் கந்தக நெடி இருக்கும்! கீழே சிறு சிதறல்கள் இருக்கும், செவியில் பலமான சத்தம் விழும்! கண்களுக்கு விட்டுவிட்டு ஒரு வகை அதிர்ச்சி இருக்கும் — அவ்வளவோடு சரி. இருள் போகாது! நிரந்தர ஒளி கிடைக்காது. ஆயிரக் கணக்கில் பணம் செலவிட்டு, அபாரமான வேலைத்திறனுடன் ஒரு வாணவேடிக்கை நடத்தி வெளிச்சம்போட்டுக் காட்டுவதை விடப் பொறுமையுடன் ஒரு சிறு அகல் விளக்கேனும் பெற்று, அதை முறைப்படி பொருத்தி வைத்தால், கப்பிக்கொண்டுள்ள இருள் ஓரளவுக்காவது போகும். அதுபோலத்தான், உங்கள், உற்சவம், கும்பாபிஷேகம், மகாமகம், தேர் திருவிழா போன்றவைகள். வெறும் வாணவேடிக்கைகள்! உருவான பலன் கிட்டாது! உருவான பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் நடத்தப்படுவதுமில்லை. நான் வேண்டுவது ஒளி—மக்களின் வாழ்வுக்கு ஓர் புத்தொளி வேண்டும்—அதை எங்கே பெற்றோம், ஆடலரசனின் அபிஷேக விழாவிலே" என்றேன். ஐயருக்குப் பிரமாதமான கோபம்! நான்,என்ன செய்வது!உள்ளதைச் சொல்லித்தானே தீரவேண்டும்.

*வாணவேடிக்கை விளக்காகுமா!!*

"ஊர் முழுவதும் பேசுகிறது—எல்லாத் திக்கிலிருந்தும் இந்தப் பக்கம் பார்க்கிருர்கள் — எங்கும் இதுபற்றித்தான் பேசுகிருர்கள்—இதற்குமுன்பு இதுபோல நடைபெற்றதில்லை, இனி இதுபோல எப்போதும் நடைபெருது என்று பலரும் பேசுகிருர்கள், இவ்விதம் யாவருடைய கவனத்தையும் ஈர்த்திருக்கிறது, தில்லை விழா. நீ, அக்கரை காட்ட மறுக்கிருய், புகழமாட்டேனென்கிருய், இதனால் என்ன பலன் என்றுகூடத் துணிந்து கேட்கிருயே, பாவி, நீ நாசமாய்ப் போகமாட்டாயா" என்றெல்லாம் சபித்துப் பேசுகிருர் புண்யகோடீஸ்வர ஐயர்.

ஒவ்வொரு திருவிழா, கும்பாபிஷேகம் நடைபெறுகிறபோதும், இதேபோலத்தான் புண்ணியகோடீஸ்வர ஐயர் பேசுகிருர்; இப்படிப்பட்ட அருமையும் பெருமையும் மிகுந்த வாணவேடிக்கையும் விழாவும், வேறு யாரும் நடத்தியதில்லை; இனியும் எவராலும் நடத்தவும் முடியாது என்று எப்போதும்தான் சொல்கிருர். அவர் சொல்கிறபடி ஊரார், கவர்ச்சி அடையத்தான் செய்கிருர்கள் — அவர் காட்டும் திக்கு நோக்கி ஆவலுடன் பார்க்கத்தான் செய்கிருர்கள். இதை யார் இல்லை என்கிருர்கள்; நானும் இதை மறுக்கவில்லை, ஆனல் நான் கேட்பது இவ்விதமான தேர் விழா வாணவேடிக்கையால் என்ன பலன் கிடைத்துவிடும்! ஒழுக்கம் வளருகிறதா! சன்மார்க்கம் தழைத்துக் காணப்படுகிறதா! அது போலப் பலன் கிடைப்பதானல், ஒவ்வொரு திருவிழா நடைபெறுவதும், அந்தப் பகுதியிலாவது கொலை கொள்ளை, சூது காமச் சேட்டை, முதலிய பாதகங்கள் குறைந்துபடவேண்டுமே, அப்படி ஏதேனும் ஆதாரத்துடன் கூற முடிகிறதா என்று கேட்கிறேன். அவரோ, வேட்டுச் சத்தம் கேள், பூச்சர வாணத்தைப் பார், புகையே சிகப்பு, மஞ்சள், ஊதா கலரில் இருப்பதைக் கவனி என்று வாணவேடிக்கையின் பெருமைபற்றிப் பேசுகிருர்.

*வாணவேடிக்கை விளக்காகாது!*

ஊர் மக்களின் கவனத்தைக் கவரும் வகையிலே இருக்கிறது என்பதாலேயே, அதிலே பயன் அதிகமிருக்கிறது என்றும் கூறிவிடமுடியாது.

கல்யாணியோ காம்போதியோ சுகமாகப் பாடிச் சேர்க்கக்கூடிய கூட்டத்தைவிட ஏராளமான கூட்டத்தை, கடைவீதியில் ஒருவன் 'வாந்தி' எடுத்துக் காட்டிச் சேர்த்துவிடமுடியும். அதனுலேயே வாந்தி எடுக்கும் வித்தை, சங்கீதத்தைவிடச் சிலாக்கியமானது என்பது பொருளாகிவிடுமா! அதுபோலத்தான், மக்களைத் திருத்த முற்படுபவன், பண்பு பரவப் பாடுபடுபவன், வேட்டு வாணவேடிக்கை காட்டி பெருந்திரளான மக்களைப் பரவசப்படச் செய்யமுடியாது. அது புண்யகோடீஸ்வர ஐயர்களால்மட்டுமேமுடியும்! கடுமையான காலராவுக்கு ஊசி போட்டுப் பிழைக்கவைக்கும் டாக்டர், உடுக்கையைப் பலமாக அடித்து, ஓம் காளி! என்று ஊர் அலறக் கூவிக்கொண்டா இருக்கிருர்! அது பூஜாரியின் முறை! இந்த டாக்டரின் வேலை ஒன்றும பிரமாதமில்லை, ஓசைபடாமல் வருகிருர், ஓரிரு வார்த்தைதான் பேசுகிருர், இரண்டோர் நிமிஷம்தான் நோயாளியைப் பரிசோதிக்கிருர், நான் அப்படியல்ல! மந்திரிக்க வேப்பிலை எடுத்தேனுனல், மூன்றுமணி நேரமாகும் முடிய!—என்று பூஜாரி பேசுவான்—அதனுலே டாக்டர் தன் முறையை மாற்றிக்கொள்ள முடியுமா? அதனுல்தான் நான் புண்யகோடீஸ்வர ஐயரின் கும்பாபிஷேகம், நாட்டுக்கு எந்த நன்மையும் பயக்காது என்பதைக் கூறினேன். நீங்களே தான் கூறுங்களேன், வாணவேடிக்கை விளக்காகுமா?

★

## தண்டனை

★

ஜானகி:- ஜம்புலிங்கத்துக்குப் பெரிய நஷ்டமாமே......பாவம், உமக்குப் பிராண ஸ்நேகமாச்சே... என்ன சொல்ருர்......

சந்திர- என்ன இருக்கு சொல்ல! அழருன்......"

ஜா:- ஐயோ, பாவம்!

சந்:- ஏண்டி! இப்ப அழருன், நேக்குக் கூடப் பரிதாபமாத்தான் இருக்கு. ஆனு, நல்லவாளோட மனசு புண்ணுகற மாதிரியா நடந்துண்டா, இப்படித்தான் ஆகும்.

ஜா:- ஏன், அவர் கஷ்டமும் நஷ்டமும் அடைஞ்சி கதறிண்டிருக்கறபோது நீர்வேறு, வைதுண்டிருக்கீர்.

சந்:- நோக்கென்னடி தெரியும் அசடு! என்னோட பிராண ஸ்நேகம்னுதானே நீ சொல்றே. நீ சொல்றது என்ன, ஊரே சொல்றது. நானே கூட அப்படித்தான் நம்பிண்டிருந்தேன். ஆனு, அவன், என் வயித்தெரிச்சலைக்கொட்டிண்டது இருக்கே நோக் கென்னதெரியும். அடே அப்பா! இந்தக் காலத்திலே, எங்கே பார்த்தாலும் ஒரே பிருமண துவேஷமா இருக்கு, ஆகையாலே, முன்னே மாதிரி நம்ம கோயில் காரியத்துக்குத் தர்மம் கிடைக்கிறதில்லை, ஆகையாலே, இந்த வருஷம் தெப்போத்சவம் உன்னோட உபயமா இருக்கட்டும் — பிரமாதமா ஒண்ணும் செலவு ஆகிவிடாது. ஒரு ஐநூறு இருந்தாப் போதும்னு கேட்டேன். உண்டு, இல்லேன்னு சொல்லணும். பார்க்கலாம், இப்ப ஏது சாமி, நாளைக்கு வாங்க, நாளை பொறுத்து வாங்கன்னு சொல்லி, ஒரு பத்து நாள் என்னை இழுக்கடிச்சி, இருபத்தைந்து ரூபாயைக் கொடுத்து, என் சக்தியானுசாரம்னு சொன்னுன். வயிறு எரிஞ்சுப்போச்சு. என்ன செய்யறது. பெரிய பணக்காரன்—எதிர்த்துப்பேச முடியுமோ! என் வயித்தெரிச்சல் வீண்போகுமோ—எள்ளு அவ்வளவும் மண்ணுப்போச்சி—அவனோட கர்வமும் போச்சு இப்ப அழருன். அப்போ! என் வயித்தெரிச்சலைக் கொட்டிண்டப்போ! என்னடாப்பா செய்யலாம், எல்லாம் உன் விதின்னு சொல்லிட்டு வந்தேன்......... ஆமாம், விதிதான் சாமின்னு ஒப்பாரி வைக்கிருன், இப்போ! விதியாவது மண்ணுவது....... நல்லவாளோட மனசை எரியச் செய்யறதாலே ஏற்படற தண்டனைன்னு இது......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

(2) அப்படியானல், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபடக் கூடிய நிலையில் உள்ள கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும்தானே ஏன், பெரியார், தி. மு. க-வுக்கு அழைப்பு என்று பேசவில்லை.

என்னைக் கேட்கிருயே!

(3) கட்சிகள் பல ஒன்று கூடி, ஒரு கிளர்ச்சியில் ஈடுபடுவது உண்டா?

ஏன் இல்லை! உண்டு!! இலட்சியம் ஒரேவிதமாக இருந்தால், ஒன்று கூடுவது சாத்தியமே.

(4) அதற்கு ஏதேனும் முறை இருக்கிறதா?

நிச்சயமாக இருக்கிறது! அந்தக் கட்சிகள் ஒன்ருகக் கூடிக் கலந்துபேசித் திட்டம் வகுத்துக் கொண்டு பிறகு செயலில் ஈடுபடுவது.

முன்பு ஒரு முறை நடத்தப்பட்ட இந்தி எதிர்ப்பு இயக்கத்துக்கான திட்டமும் முறையும் வகுத்துக்கொள்வதற்காக, இந்தி எதிர்ப்பு சம்பந்தமாக ஒத்த கருத்தை வெளியிட்டு வந்த ம. பொ. சிவஞானம் அவர்களை அழைத்து, மாநாடுகளிலும், கமிட்டிக் கூட்டங்களிலும் கலந்து பேசி, திராவிடர் கழகம் (அப்போது நாம் அங்கேதான்) பணியாற்றி — ஜனநாயகப் பண்பை எடுத்துக்காட்டி இருக்கிறது. ம. பொ. சி. அப்போதும் தமிழரசு கழகம்தான் நடத்திக்கொண்டிருந்தார்.

(5) பெரியார் அப்படி ஏதும் செய்யக் காணேமே?

தேவையில்லை என்று அவர் கருதியிருக்கலாம். தி. மு. க. பொதுச் செயலாளரை அழைத்துப் பேசி, திட்டம் வகுத்தால், ஒன்று கூடிக் கிளர்ச்சி நடத்தும் ஆர்வம் ஏற்படும் என்றுகூட வேண்டுகோள் விடப்பட்டது.

(6) ஏன் அந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது?

ஏழை பேச்சு அம்பலம் ஏறுமா!

(7) இப்போது, எல்லாக் கட்சிகளையும் அழைப்பதன் பொருள்?

நல்ல திட்டம் என்று நம்பி, வருவதானல் வரட்டும் என்பது தான்.

(8) வராவிட்டால்?

வராவிட்டாலா! அழைத்தும் வரவில்லை, அற்பர்கள் என்று எப்போதும் ஏசுவோர் ஏசுவர்!

(9) வருவதானல்?

வந்தார்கள்—என் திட்டத்தின் படி கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள்! வேறு வழி, இதுகளுக்கு? என்று குத்தல்பேச்சு கிளம்பும். அவ்விதமாக இந்தி எழுத்து அழிப்புப் போரில் ஈடுபட்டபோது ஏசினர் என்று நமது துணைச்செயலாளர் துயரத்துடன் கூறுகிருர்.

(10) அப்படியானல் என்ன செய்யலாம்?

அதென்ன என்னைக் கேட்கிருயே! உனக்கென்று ஒரு கட்சி இருக்கிறது —அது அழைக்கப்படவில்லை—ஒரு பொதுச்செயலாளரைத் தேர்ந்தெடுத்திருக்கிருய் அவரை அழைக்கக் காணேம்—வேருேர் கட்சி, தன் நிர்வாகக் கமிட்டியில், தனக்குச்சரியென்று பட்ட ஒரு திட்டத்தை நிறைவேற்றி கிளர்ச்சி துவக்குகிறது—நாம் என்ன செய்ய என்று கேட்கிருயே—நீதான் சொல்லேன்—!

(11) அப்படியானல்............

போர் நடைபெறப்போகிறது—இதிலே நாங்கள் காட்டப்போகும் அபாரமான ஆற்றலையும், அடையப் போகும் வெற்றியையும், அறிவிலிகாள்! ஆற்றல் அற்றது காள்! காண்மின், காண்மின்!—என்று கூறிவிட்டுக் களம் செல்லும் கர்மவீரர்களைக் காண நேரிட்டால், நான் கைகூப்பித் தொழுவேன்!

போர் நடைபெறப் போகிறது—அதன் நோக்கம் இது—முறை இவ்விதம் இருக்கும் — இதிலே கலந்து பணியாற்ற வருவாயா, உனக்கு இந்த நோக்கமும் முறையும் புரிகிறதா, பிடிக்கிறதா, என்று கேட்டால் கைகூப்பித் தொழுவது மட்டுமல்ல, காலைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு, இது தான் கண்ணியமான முறை, காரிய சித்திக்கு ஏற்ற வழி, பகைவர் கண்டு திடுக்கிடத்தக்க வகையான திட்டம், போர் முறை பற்றிக் கலந்து பேசுவோம், என்று கூறி, ஆர்வத்துடன் பணிமனையில் நுழைவேன்.

இருவிதமுமின்றி, போர் போர்! போரிடும் ஆற்றலுள்ளவர்களெல்லாம், வரலாம்! வருவோர் சேர்த்துக்கொள்ளப்படுவர்—விளக்கம் கேட்போர், கலந்

## முட்டாள்தனம்!

குமரப்ப செட்டியார்:- எவ்வளவு அனுபோக முள்ளவரு! அரை ரூபா கூட அனுவசியமாச் செலவழிக்கமாட்டாரு. அப்படிப் பட்டவருக்கு பாவம், ஒரே அடியா, பெரிய நஷ்டம் வந்திருக்குதே.

மணிகண்ட பிள்ளை:- ஏன்யா! வியாபாரம் செய்யறதுன்னு, என்ன, சாமான்யமா! மூளை இருக்க வேணுமேய்யா, மூளை சுறுசுறுப்பா இருக்கவேணும். ஜம்புலிங்கம், பெரியவங்க சேத்துவைத்த சொத்து இருந்ததுஅதனலே கடைவீதியிலே பெரிய புள்ளின்னு பட்டம் பெற்றுகிட்டு இருக்க முடிந்தது. பார்த்தாயா, இப்ப...... எல்லா சொத்தும், கடன் காரனுங்களுக்குத்தான்!........

கும:- கேள்விப்பட்டேன்....அதைத் தான் நானும் சொல்லறேன்... எப்படி இவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்படும்படியா நடந்து கொண்டாரு.

மணி: எள்ளு மூட்டை 'ஸ்டாக்' செய்தாரு......எல்லாம் இப்ப, மண்ணு போச்சி.........

கும:- போருதவேளை! விதி!

மணி:- விதியாவது மண்ணுவது! முட்டாள்தனம்னு சொல்லய்யா! எள்ளு மூட்டை எதுக்காகய்யா, 'ஸ்டாக்' செய்யணும்—மார்க்கட் நிலவரம் தெரியவேணுமா..........ஆறு மாசமா, எண்ணெவிலை, மளமளன்னு கீழே விழுதே, இந்தச் சமயத்திலேயா, ஸ்டாக் செய்யறது எள்ளு. வெளி மார்க்கட்டுக்கும் அனுப்பக் கூடாதுன்னு உத்தரவு இருக்கு! இதைக் கவனிக்க வேணுமா! மூட்டைக்கு பத்து கிடைக்கும், இருபது கிடைக்கும்னு மனக்கணக்கு போட்டா போதுமா.........விதிவிதின்னு இப்ப தலையிலே அடிச்சிகிட்டு என்னப் பிரயோஜனம், சொல்லு ... முட்டாள்தனம்னு சொல்லய்யா, விதியா இது... ...மார்க்கட் நிலவரம் தெரியாமப் படிக்கு வியாபாரம் செய்யறதுக்குப் பேரு, விதியா, பைத்யக்காரத்தனம்-முட்டாள் தனம்னு சொல்லு.

★

துரையாடவேண்டுமென்று கூறிடும் துணிவு கொண்டோர் தேவைப்படார்,கலந்துகொள்ளாதவர்கள், ஈனப் பிறவிகள், நாட்டுத் துரோகிகள் — அவர்கள் அழிக, அழிக, அடியோடு அழிந்துபடுக! என்று சபித்துக் கொட்டினால், நான் என்ன செய்ய முடியும். நீயும்தான் என்ன செய்ய முடியும்.

*(12) நெருக்கடியான சமயம் — இறுதியான போர் — தீவிரமான கிளர்ச்சி—இதிலே நாம் ஈடுபடாமலிருக்கலாமா?*

நாமும் ஒரு கட்சிக்குப் பொறுப்பானவர்கள்! நாமும் பிறர் பார்த்து மெச்சத்தக்க கிளர்ச்சிகளை நடத்தி, கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கிறோம். அப்போது உதவி தர, உபசாரம் கூற, ஒரு சிறு புன்னகை காட்ட யாரும் வரவில்லை! மாறாக, அற்பமான கிளர்ச்சி—பயனற்ற வேலை என்று கேலியும் கண்டனமும் பிறந்தது. மேலும், ஆகஸ்ட்டு கிளர்ச்சியோடு எல்லாப் பிரச்சினைகளும் முடிந்து விடுகின்றன என்றா பொருள்! எவ்வளவோ கிளர்ச்சிகள் கருவில்! ஒரே நோக்கம் கொண்ட இருவேறு அமைப்புகள் கலந்து பேசி ஒரு திட்டம் தீட்டி, தக்கவிதமான கிளர்ச்சி நடத்தும் காலம் ஒன்று வரத்தான் போகிறது என்ற நம்பிக்கையுடன் இருக்க வேண்டியதுதான். அதுவரையில் அந்தந்த அமைப்பும்,அததன் சக்திக்கும் சுபாவத்துக்கும் ஏற்றவகையான கிளர்ச்சியில் ஈடுபடுவது தவிர்க்க முடியாதது. நாம் துவக்கிய மும்முனைப் போராட்டத்தின் போது 'விடுதலையில்' கிளர்ச்சிகள் என்ற அருமையான கட்டுரையில், இந்தக் கருத்துப்படப் பெரியார் எழுதியுமிருக்கிறார்.

*(13) போர்முறை பற்றி என்ன கருதுகிறீர்?*

கொடி கொளுத்தும் போர் முறை பற்றித்தானே! அது பற்றி நமது கருத்து என்ன, நமக்கு அது உடன்பாடானதா அல்லவா என்று எங்கே கேட்டார்கள்-எப்போது கேட்டார்கள்! பொதுச்செயலாளரை அழைத்துப் பேசியிருந்தால், அவர், திராவிட முன்னேற்றக் கழகம் இதுபற்றி என்ன கருதுகிறது என்று தெரிவித்திருக்கக்கூடும். பொதுவாக, இந்தி எதிர்ப்பு சம்பந்தமாக நடத்தப்பட்ட கிளர்ச்சிகளை எல்லாம் வடநாட்டுச் சர்க்கார் அலட்சியப்படுத்திவிட்டதால், இப்போது வடநாட்டுச் சர்க்கார் பரபரப்படையக்கூடிய வகையில், கொடியைக் கொளுத்தப்போகிறோம் என்று அவர்கள் காரணம் காட்டுகிறார்கள்; இந்தி எதிர்ப்புக்கான கிளர்ச்சியை வடநாட்டுச் சர்க்கார் அலட்சியப்படுத்துவதை நாமும் கண்டிக்கிறோம்; வடநாட்டுச் சர்க்காருடைய கவனத்தைக் கவரும்படி இருக்க வேண்டுமென்றுதான் நாம் இரயில் நிறுத்தக் கிளர்ச்சி நடத்தினோம், நாம் கலந்துபேச அழைக்கப்பட்டிருந்தால், கிளர்ச்சி எப்படி இருக்க வேண்டுமென்றால், இந்தி எதிர்ப்பு விஷயத்தில் அனுதாபம் கொண்ட காங்கிரஸ்காரர்களையும் நமது பக்கம் சேர்க்கும்படியானதாக இருக்கவேண்டும்; கொடி கொளுத்துவது போன்ற முறை மூலம், காங்கிரஸ்காரர்களுக்கும் திராவிட இயக்கத்துக்கும் நேசம் ஏற்படவே முடியாத ஓர் மோசமான சூழ்நிலை ஏற்பட்டுவிடும், எனவே வேறு முறையைக் கொள்வோம் என்று எடுத்துச் சொல்லி இருப்போம். இன்று நமது கருத்தினை ஏற்றுக் கொள்ளாமலிருக்கும் காங்கிரஸ்காரர்களே, நமதுகோரிக்கையை உணர்ந்து, மனம் மாறி நமது இயக்கத்துக்கு ஆக்கம் தேடுவதற்கான உதவி அளிக்க முன்வரக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துவதாக நமது கிளர்ச்சி இருக்க வேண்டும். அவர்கள் கேட்டாலே வெறுப்பும் வேதனையும் அடையத்தக்க முறை சரியாகாது. அவர்களை நம்மோடு அழைத்துச் செல்லும் வழியுமாகாது இந்தக் கொடி கொளுத்துவது என்பதை எடுத்துச் சொல்லி இருந்திருப்போம். நாம் இப்படிச் சொல்லக் கூடும் என்பதை அறிந்துதானோ என்னமோ கொடி கொளுத்தும் திட்டம் தீட்டும் கமிட்டிக்கு நமது பொதுச்செயலாளரை அழைக்கவில்லை. பிள்ளையார் உடைப்பின் போதே, நாம், நம்மோடு நாளாவட்டத்தில் வந்து சேரவேண்டியவர்களை, வீணாக வெறுப்படையச் செய்துவிடும் என்றதினால்தான், ஒதுங்கி இருந்தோம்.

*(14) ஒதுங்கி இருந்தால் ஒழிந்துவிடுவார்கள் என்று பேசுகிறார்களாமே!*

திராவிட முன்னேற்றக் கழகம், போராட்டங்களை நடத்தி இருக்கிறது—தனித்து நின்று.

திராவிட முன்னேற்றக் கழகம், பிறர் துவக்கிய போராட்டம், தாங்கள் தீட்டிய திட்டத்துக்கு ஒத்ததாக இருந்தநேரத்தில் துணையாக இருந்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், பிறர் நடத்திய போராட்டத்தில் கலந்துகொள்ளாமல், ஒதுங்கியும் இருந்திருக்கிறது.

## வடநாட்டான் எங்கும்!

“ஒரு கதை உண்டு! டில்லிக்கு வந்தானாம் ஒரு தென்னிந்தியன் — சுற்றிப் பார்த்த அவனை, ‘எப்படியிருக்கிறது டில்லி’ என்று கேட்டாராம் ஒருவர். அதற்குப் பதில் சொன்னானாம், “டில்லி, நன்றாகத்தான் இருக்கிறது; ஆனால், இங்கே ஏராளமான வடநாட்டாரல்லவோ இருக்கிறார்கள்!” கதையைச் சொல்லி, வடக்கு அல்ல தெற்கை அடிமைப் படுத்துவது —தெற்கத்தியாருக்குத்தான் பேராசை அதிகம் எனும் கருத்தை சூசகமாகச் சொல்ல முயன்றிருக்கிறார், முன்ஷி-உத்திர பிரதேசத்துக் கவர்னர். அவர் கூற்றைக் கேட்ட, மயிலை விவேகானந்தா கல்லூரி வாசிகள், ஆஸ்யரசம்' என எண்ணி ரசித்தனராம், ரசிகரஞ்சனி சபாக்காரர்களல்லவா, மயிலை வாசிகள்!!

ஆனால் 'நம்ம' கவர்னர் இருக்கிறாரே பிரகாசா, அவர் தமது முடிவுரையில் சொன்னாராம் முன்ஷியைப் பார்த்து, “முன்ஷி, கதை சொன்னார், டில்லியில் இவ்வளவு வடக்கத்தியார்களா! —என்று ஆச்சரியப்பட்ட தென்னாட்டானைப்பற்றி — அவருக்கு நான் சொல்ல விரும்புகிறேன்— சென்னையில்கூட, நான் அதிகமான வடக்கத்தியர்களைத்தான் பார்க்கிறேன்,” என்பதாக. இதற்கும், சிரித்தார்களாம், ரசிகரஞ்சகர்கள்!! முன்ஷி, தென்னாட்டானுக்குப் பேராசை, என்கிறார்! பிரகாசா, வடநாட்டான் எங்கும் வாழ்கிறான், என்கிறார்!!

★

வடநாட்டு மந்திரிகளுக்குக் கருப்புக்கொடி காட்டி, தடியடி, சிறை, இவைகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் தாங்கிக் கொண்டது. துணை யாரும் கிடையாது! அழைக்கவும் இல்லை.

144 தடையை மீறி, தடியடி, சிறைமட்டுமல்ல, துப்பாக்கிக் குண்டுகளைத் தாங்கிக் கொண்டிருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம் — தனியாகக் களத்தில் இறங்கி.

இரயில் நிறுத்தம், ஆச்சாரியார் வீட்டின்முன் மறியல்— என்பவைகள், மாற்றுக்கட்சிக்காரரெல்லாம் கூட மறக்கமுடியாத சம்பவங்கள்—தனியாகத்தான் நடத்தினோம்—சர்க்காரின் குண்டுகள் மட்டுமல்ல, ஏசலையும் தாங்கிக் கொண்டோம்; இரத்தம் பீறிட்டது; பிணமும் வீழ்ந்தது.

எனக்குத் தெரிந்த அளவில் நமது சுயமரியாதை இயக்கக் காலத்திலிருந்து, கவனத்தில் வைத்துச் சொல்கிறேன், நாம் நடத்திய கிளர்ச்சியை ஒடுக்க, சர்க்கார் துப்பாக்கியின் துணையைத் தேடியதே, இரயில் நிறுத்தக் கிளர்ச்சியின்போதும், குன்றத்தூரில் தடை உத்தரவை மீறிய நேரத்திலும்தான்!

மதுரை கருப்புச்சட்டைப் படை மாநாட்டிலே துப்பாக்கிச் சத்தம் கேட்டது—அது நம்மை நோக்கி அல்ல, அக்கிரமமாக நமது மாநாட்டிலே தீ வைத்த காங்கிரஸ்காரரை நோக்கி.

எனவே, திராவிட முன்னேற்றக் கழகமாக நாம் வடிவம் கொண்ட பிறகு, நாம் ஒரே குடும்பமாக இருந்தபோது கண்டதைவிட, கடுமையும் கொடுமையும் மிகுந்த அடக்கு முறையைச் சந்தித்திருக்கிறோம்.

அதுபோலவே, அவர்கள் நடத்திய, இந்தி எழுத்து அழிப்புப் போரில் நாமும் ஈடுபட்டோம் — அதற்கான திட்டம் தீர்மான உருவில் நம்மிடம் ஏற்கனவே இருந்ததால்.

அதுபோலவே, அவர்கள் வடநாட்டுத் துணிக் கடை மறியல் செய்தனர்!

அதிலே அனைவரும் கலந்து கொள்ளவேண்டும் என்று அறிவுரை கூறினர்!

கலந்து கொள்ளாதவர்கள் கல்லாவர், மண்ணாவர், கால் தூசு ஆவர், என்று சாபம் கொடுத்தனர்.

இனி இதுகள் இருக்குமிடம் தெரியாது ஒழிந்துபோகும் என்று எச்சரித்தனர்.

எனினும், நாம் அந்தக் கிளர்ச்சியில் கலந்து கொள்ளவில்லை—மடிந்துபடவில்லை!!

அதுபோலவே, பிள்ளையார் உடைப்பு! நாம் அதிலே ஈடுபட்டோமில்லை! இனி இதுகள் செல்லாக் காசுகள் என்று அவர்கள் ஆரூடம் சொல்லாமலில்லை! எனினும், திராவிட முன்னேற்றக் கழகம், இந்தப் போக்கினால், வளர்ச்சி குன்றிப் போனதாக, அவர்களே கூற முடியாது.

(15) இவர்கள் கொடி கொளுத்தும் கிளர்ச்சியில் ஈடுபடாவிட்டால் என்ன, நாங்கள் அதிலே வெற்றி காண்போம்—கண்டு வெட்கப்படட்டும் என்று பேசுகிறார்களாமே!

பேசட்டுமே, அதனால் என்ன; நம்மைக் கலந்து வகுக்கப்பட்ட திட்டமல்ல அது; அதை நடத்தும் முழுப் பொறுப்பும் அவர்களைச் சார்ந்தது; அதிலே வெற்றி கிடைத்து, கீர்த்தி கிடைத்தால், நமக்கு நிச்சயமாகப் பங்கு வேண்டாம்; அவர்களே அதற்கு உரியவர்கள் என்று நாமே கூறிவிடுவோம்—அவர்கள் களத்திலே, எல்லா திசைகளிலும் பாய்ந்து முன்னேறி வெற்றி பெறுகிறார்கள் — அவர்கள் பெறும் வெற்றி எத்தகையது என்றால் இனி வேறு யாருக்கும் எந்த வகையான வேலையும் இல்லை என்று சொல்லத்தக்க வகையான முழு வெற்றி என்றே வைத்துக் கொள்வோம், அதனால் என்ன, நஷ்டம்; நமக்கென்ன கஷ்டம். நந்தவனத்துக்கு நாள் பூராவும் நீர் பாய்ச்ச வேண்டும் என்று எண்ணிக்கொண்டு, கிணற்றடி போகிறான்—பெரு மழை பெய்தால், என்ன கஷ்ட காலம்! நாம் நீர் பாய்ச்ச முடியாமல் போய்விட்டதே என்றா ஆயாசப்படுவான், நமக்கு வேலை இல்லை, மழை வந்தது நல்லதாயிற்று, மழையே வாழி! என்று வாழ்த்துவான்; வேறென்ன!!


*

தம்பி! இவைகள்தானே நீ கேட்க விரும்புவாய்—நீ கேட்பதாக வைத்துக்கொண்டு நானே பதிலும் எழுதிவிட்டேன்.

இதுபோதாது! நமது கழகப் பொதுச்செயலாளரின் கருத்து என்ன என்று கேட்பாய். பொதுச் செயலாளரும் துணைச்செயலாளரும் இதேகருத்தினைத்தான் என்னிடம் கூறினார்கள்; நான் உன்னிடம் கூறிவிட்டேன்; நீ, தம்பி! மற்றவர்களுக்குச் சொல்லிவிடு!!

அன்பன்,

**அண்ணாத்துரை.**



# திராட்டு

## நாயாய்ப் பிறக்கினும்!

மரியோ டி லாரா எனும் சீமாட்டி சீராட்டி வளர்த்துக்கொண்டு வருகிறார்களாம், 160 நாய்களை! காப்ரி தீவில், இந்த நாய்களுக்கான விடுதியைச் சீமாட்டி அமைத்திருக்கிறார்கள். ஆனால் இத்தாலிய அதிகாரிகள், உடனே இந்த நாய்களை காப்ரி தீவிலிருந்து அப்புறப்படுத்தியாக வேண்டுமென்று சீமாட்டிக்குக் கூறிவிட்டனர்; ஏனெனில் காப்ரி தீவுக்கு உல்லாசப் பயணத்துக்கு வருபவர்களால், இரவுக் காலங்களில், இந்த நாய்கள் குறைத்துக் கொண்டிருப்பதைச் சகித்துக் கொள்ளமுடியவில்லை. சீமாட்டிக்கு வேண்டுமானால் அது சங்கீதமாக இருக்கலாம், ஆனால் உல்லாசத்துக்காக வருபவர்களுக்கு உபத்திரவமாகத்தானே இருக்கும், எனவே நாய்களை வெளி ஏற்றும்படி சீமாட்டிக்கு உத்திரவிட்டனர். சீமாட்டி அப்பில்செய்தும் பயனில்லை. எனவே நாய்களை அழைத்துக்கொண்டு அந்த நாரீமணி, காப்ரி தீவைவிட்டுக் கிளம்பினார்கள்—ஆனால் நாய்களுக்குக் கஷ்டம் வரலாமா—சீமாட்டி, போர்டிகாரா எனும் மற்றோர் இத்தாலிய உல்லாச நகருக்குச் சென்று, அங்கு அந்த நாய்களுக்கு வசதியான விடுதி, உலவ இடம், நீந்தி விளையாட அலங்காரத் தடாகம் எல்லாம் அமைத்துவிட்டார்களாம்! நாயாகப் பிறந்தாலும், இப்படியல்லவா பிறக்கவேண்டும்!

## பாதுகையின் மகிமை

''என் கால் செருப்புக்குச் சமானம்'' என்று சர்வ சாதாரணமாகச் சொல்லி விடுகிறார்கள்! ஒரு ஜதை செருப்பு படுத்திவைக்கும் பாடு தெரியாமல் சொல்லிவிடுகிறார்கள்!! பாதுகா பட்டாபிஷேகத்தைக் குறித்தல்ல கூறுவது! இப்போது, நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு நிகழ்ச்சி. ஒரு ஜதை செருப்பைத் தேடி சர்க்கார் அதிகாரிகள் அலைகிறார்கள். ரங்கோனிலிருந்து கல்கத்தா விமானத்தில் வந்து இறங்கிய ஒரு பிரயாணி, தன்னைக் காண வந்தவருக்குத் தான் அணிந்துகொண்டிருந்த செருப்பைக் கொடுத்தார்—அவர் அதை அணிந்துகொண்டு போய்விட்டார். இப்போது சர்க்கார் அதிகாரிகள், அந்தச் செருப்புக்காகத்தான் தேடி அலைகிறார்கள்—காரணம் அந்தச் செருப்பிலே, அவ்வளவும் வைரங்கள் வைத்து தைத்து இருக்கிறதாம். சுங்க இலாகா இந்தச் சூட்சமத்தை ஆறு மணி நேரத்துக்குப் பிறகு தெரிவித்திருக்கிறது. இதற்குள் இருவரும் மறைந்துவிட்டனர்! செருப்பு என்று கேவலமாகச் சொல்லி விடலாமா இனிமேல்! எந்தச் செருப்பிலே எந்த வைரம் இருக்கிறதோ, யார் கண்டார்கள்!!

## மானம், போகிறதாம்!

பஞ்சாபிலுள்ள இந்துக்களின் மானம் பறிபோய்விட்டதாம்! எதனால்? பஞ்சாப் சர்க்கார், மானங்கெட்ட தனமாக, சிக்கியர் கிளர்ச்சிக்கு அடிபணிந்து, தடை உத்தரவை வாபஸ் பெற்றுவிட்டதாம். இந்தச் 'சரணாகதி'யால், பஞ்சாபில் இந்துக்களுக்குச் சகிக்க முடியாத அவமானம் ஏற்பட்டுவிட்டதாம். சிக்கியர்களின் சட்ட விரோதமான நடவடிக்கைகளை அடக்கி ஒடுக்க வக்கில்லாமல், வளைந்து கொடுத்துவிட்டது பஞ்சாப் சர்க்கார். எனவே இனி ஒரு விநாடி கூட, அந்த ஆட்சி நீடிக்கவிடக் கூடாது, மந்திரி சபையைக் கலைத்துவிட்டு, உடனே குடிஅரசுத் தலைவரின் நேரடி ஆட்சியை ஏற்படுத்தியாக வேண்டும் என்று, மஹா பஞ்சாப் சமிதி தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. இந்தத் தீர்மானத்தை அமுலாக்குவதற்கு ஒரு செயல் கமிட்டியும் அமைக்கப்பட்டிருக்கிறதாம். சீக்கியர்களின் கிளர்ச்சியை ஒடுக்க துப்பாக்கிப் பிரயோகம் வரையில் கையாண்டு பார்த்தது பஞ்சாப்சர்க்கார். கிளர்ச்சித் தீ கொழுந்துவிட்டெரிந்தது; பத்தாயிரம்பேர் சிறை சென்றனர். சரணாகதி அடைவது தவிர வேறு மார்க்கமில்லை. நிலைமை இது. எனினும் சீக்கியர்களின் கரம் இதனால் வலுத்துவிடும் என்று கிலிகொண்ட இந்துக்கள், சமிதி மூலம், இந்தத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். இந்துக்களுக்கும் சீக்கியர்களும், பஞ்சாபிலே உள்ள ஒற்றுமை இவ்வளவு நேர்த்தியாக இருக்கிறது, சீக்கியர்களின் வளர்ச்சியையும் கிளர்ச்சியையும் தடுக்க வேண்டும் என்று டில்லி தேவதைகளுக்குச் சமிதி தூபமிடுகிறது. ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டாலும்பரவாயில்லை, சீக்கியரை அடக்கினால் போதும் என்கிறார்கள் சுமதியில் உள்ளவர்கள். இதற்காக செயலில் ஈடுபட, சாந்தராம் அகர்வால், கிருஷ்ணலால், காளிசரன் எனும் மூவர், கொண்ட கமிட்டியும் உருவாகியிருக்கிறது! பாரதமாதாவின் பிள்ளைகளின் பரந்த மனப்பான்மை, பஞ்சாப்பில் பளிச்செனத் தெரிகிறது!!

## கூவாதே!

குகூ! குகூ! என்று
கூவாதே!
குயிலே!
குருட்டாந்தை தூங்கவேணும்
குறும்புத்தனம், பண்ணுதே!

என்று உடுமலை நாராயணக்கவி சொர்க்கவாசலில் ஒரு பாட்டு எழுதி, ஆதிக்க வெறியைக் கண்டித்திருக்கிறார். கதையில்தான் இப்படி என்றால், இப்போது நிஜமாக இப்படிஒருவிசித்திர நிலைமை ஏற்பட்டிருக்கிறது; குயிலுக்குஅல்ல, கோழிகளுக்கு!

மேற்கு ஜெர்மனியைச் சார்ந்த நார்டர்னி தீவில், சேவல்கள், மாலையிலிருந்து விடியும் வரையில், கூவக்கூடாதாம்! கூவினால், கோழிகளைக் கொன்று போடவேண்டும் என்று அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர். இந்த விசித்திரமான உத்தரவுக்குக் காரணம், இரவுக் காலங்களிலே கோழிகள் கூவுவதால், நார்டர்னி தீவுக்கு உல்லாசத்துக்காக வந்துள்ளவர்களுக்குத் தொல்லையாக இருக்கிறதாம். அவர்களின் சௌகரியத்துக்காகவே கோழிகள், கண்ட நேரத்தில் கூவுவது தடுக்கப்பட்டிருக்கிறது. நார்டர்னி தீவு, ஒரு உல்லாச புரியாக இருந்து வருகிறது. இங்கு ஏராளமானவர்கள் பொழுது போக்க வருகிறார்கள்! இவர்களின் உல்லாசத்தைப் பாதுகாக்க, கோழிகளின்மீது பாய்கிறார்கள், அதிகாரிகள்.

## கல்வி, மலர!

படையைப் பெருக்கப் பணத்தைச் செலவிடும் பாவிகள்—அதில் கொஞ்சத்தை, அறிவுப் படையைப் பெருக்கச் செலவிடலாகாதா?'' என்று கடுமையாக எடுத்துக் கூறவில்லை, அவர்கள்! என்றாலும், தீர்மானம் போட்டு, தெரிவித்துள்ளனர் ஜினீவாவில் கூடிய கல்வி மாநாட்டினர்!! 65 நாடுகளின் பிரதிநிதிகள் கூடி, நிறைவேற்றிய தீர்மானம் இது. அதன்படி செய்யுமா, நேரு சர்க்கார்! படைபலத்துக்கெனப் பாதியளவு செலவழிக்கும் இவர்கள், 65 நாடுகளின் கூட்டுக் குரலை ஏற்பார்களா!!

☆

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு ''திராவிட நாடு'' அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.